புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம்௵ மார்ச்சு௴ 31௳ [ந. 242

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CCXLII.**

ஜெர்மனி சில வாரங்களுக்குள் சரணடையும்.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் 1-வது கௌன்ஸிலரான கான் பஹதூர் P. கலிபுல்லா ஸாஹிப் பஹதூர் 26-3-45௳ அன்று புதுக்கோட்டை சட்ட சபையில் செய்த பட்ஜெட் பிரசங்கத்தின் குறிப்புகள்.

1. சென்ற வருஷத்தில் நான் பட்ஜெட் திட்டத்தை சமர்ப்பித்தபொழுது யுத்த நிலைமையில் குறிப்பான மாறுதல் ஏற்பட்டுவிட்டதென்றும், நேசதேசத்தார்கள் படைகளின் நிலைமை மூலை திரும்பிவிட்டதென்றும், இறுதி வெற்றியை அடைவதற்கு விரைவில் அடி எடுத்துவைக்க ஆரம்பித்துவிட்டார்களென்றும் நான் சொன்னேன். இன்று நாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே யுத்தப் போக்கு துரிதமாக இருக்கிறதென்று நான் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ருஷ்யாவும், ஐரோப்பா பூராவும் கோர அரக்கனை ஹிட்லரின் பிடிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன. சில நாட்களில் இல்லாவிட்டாலும், சில மாதங்களுக்குள் ஜெர்மனி நிபந்தனையற்ற சரணாகதி செய்துவிடும். ஹிட்லரின் பேராசை ஒழியவும் உலகத்தில் சமாதானம் நிறுவவும் கடவுள் அருள்புரிவாராக.

2. தூரக்கிழக்குப் போர் நிலைமையும் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றது. இம்பாலிலிருந்து ஜப்பானியர்கள் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள். பர்மா ரஸ்தா மறுபடியும் திறக்கப்பட்டுவிட்டது. நேசதேசப் படைகள் பர்மாவுக்குள்ளும் முன்னேறிவிட்டார்கள். மாண்டலே மார்ச்சு மாதம் 19-ம் தேதியன்று நமது வசமாகிவிட்டது. கடற்தளபதி நிமிட்ஸிடமுள்ள அமெரிக்கர்களும் ஜெனரல் மாக்ஆர்தரும் ஜப்பானியர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட அநேகத் தீவுகளிலிருந்தும், முக்கியமாக பிலிப்பைன்ஸின் பெரும் பாகத்திலிருந்தும், ஜப்பானியர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். ஜப்பானைத் தாக்குவதற்கு பாய்ச்சல் ஸ்தலமும் விமானதளமுமான ஐவோ ஜிமாவில் படைகள் இறங்கிவிட்டன. ஜப்பானின் தலைநகரமான டோக்கியோ இடைவிடாது வெடிகுண்டுகளால் நொறுக்கப்பட்டு வருகிறது. ஜப்பானியர்கள் அந்த நகரத்தைக் காலிசெய்துவிட்டார்கள் என்றே சொல்லலாம். ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் ஜப்பானைத் தாக்க நேசதேசப்படைகள் குவியும்பொழுது நாம் எதிர்பார்ப்பதற்கு முன்னதாகவே ஜப்பான் வீழ்ச்சிபெறும் என்று நாம் நம்பியிருக்கலாம்.

3. இந்த உலக யுத்தத்தில் இந்தியச் சேனை எல்லாப் போர்முனைகளிலும் கியாதிபெற்று அதன் தீரத்திற்கும் வேலையிலுள்ள பற்றுதலுக்கும் இதுவரையில் 2,532 பரிசுகளைப் பெற்றிருக்கிறது. விக்டோரியா கிராஸ் பதக்கம் பெற்ற நாடுகளுக்குள் அது இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

4. யுத்தத்தினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் முன் போலவே தொடர்கின்றன. Mr. V. பாலகிருஷ்ணன் சேர்வையின் ஒத்துழைப்பினாலும் உதவியினாலும் 1353-ம் பஸலியில் ஒரு தொழிலாளர் படையை அனுப்பியதுபோக 1354-ம் பஸலியில் இரண்டு யூனிட்டுகளை நாம் அனுப்பியிருக்கிறோம். 1353-ம் பஸலியில் நாம் அனுப்பிய படை கியாதியுடன் திரும்பி வந்திருக்கிறது. பொதுஜன மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பிலிருந்த யுத்தக்கைத்தொழில் பயிற்சி நிலயத்தை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மூடிவிட்டபோதிலும், கல்லூரியிலுள்ள கைத் தொழில் பயிற்சி சாலையில் பயிற்சியாளர்களை கவர்ச்சி செய்யும் முறையில் நாம் ஸ்டைபண்டு கள் கொடுத்துவந்த போதிலும் இன்னும் அநேக ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன. ஸமஸ்தானத்தில் உசிலம்பட்டியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மீனாக்ஷி நெசவு ஆலையும், கனக வேல் ஆலையும், புதுக்கோட்டை தொழிற்சாலை கார்பொரேஷன் லிமிடெட்டும், கிடியா தொழிற்சாலை போன்றவைகளும் தொழிலாளர்களுக்கு வேலையும் போதுமான ஊதியத்தை யும் கொடுத்துவருகின்றன. 'பயிர் மிகச்செய்' திட்டமும், விவசாயப்பொருள்களின் அதிக விலையும் விவசாயிகளுக்கு அதிக ஊக்கத்தை அளித்திருக்கின்றன.

5. சென்ற வருஷத்திய பட்ஜெட் பிரசங்கத்தில் நெல், சர்க்கரை, மண்ணெண்ணெ, ஸ்டாண்டர்டு துணி, ஆலைத்துணி முதலியவற்றை பொதுஜனங்களுக்கும், கலப்பை கொழுக் களை விவசாயிகளுக்கும் நியாயமான விலைக்கு வழங்க ஈ-தர்பார் அவர்கள் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று நான் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். அந்த ஏற்பாடுகள் திருப்திகரமாகவே நடைபெற்று வந்திருக்கின்றன. எஃகு, இரும்புத் தகடுகள் முதலிய சாமான்களுக்கும் கோட்டாவைப் பெற்று சரக்கை வரவழைத்து பெரும்பாலும் கோவாப ரேடிவ் ஸ்டோர்கள் மூலமாக குறிப்பான விலைக்கு வாளிகள் செய்வதற்காக அவைகளை வியாபாரிகளுக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலும் பொதுமக்களுக்கு வண்டிப் பட்டாக்களையும் விற்க ஆரம்பித்திருக்கிறோம். சென்ற பஸலி முடிவிலிருந்து அவசரமான மராமத்துக்காக பொதுஜனங்களுக்கு சிமிண்டை வரவழைத்து ஸப்ளை செய்யவும் ஈ-தர்பார் அவர்கள்முன் வந்திருக்கிறார்கள். உளுந்து, துவரை, மிளகாய், சர்கரை, புளி, நெசவு துணி, மரம், நெல், அரிசி, பால், வைக்கோல் முதலியவற்றை ஸமஸ்தானப் பிரஜைகளின் நலத்தை உத்தேசித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஈ-தர்பார் அவர்கள் கட்டுப் பாடு செய்திருக்கிறார்கள். மேலும் மருந்துச் சரக்குகள், மின்சார பல்புகள், பித்தளைப் பாத்திரங்கள், ஜோடுகள், உணவுப் பொருள்கள், மற்றும் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் முதலியவற்றின் விலையை கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளர்களுக்கு உதவி செய்யும், பொதுஜனங்களின் சௌகரியத்தை அதிகரிக்கவும் ஈ-தர்பார் அவர்களிடமுள்ள பூரா சக்தியையும் உபயோகிக்க அவர்கள் முன் வருவார்கள்.

6. இப்பொழுது நமது ஐவேஜி நிலைமை சம்பந்தமான மற்ற சில முக்கிய விஷயங்களைப் பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்.

புதுக்கோட்டையில் தலைமை ஆபீஸூம், வெளியே 10 கிளை ஆபீஸூம் உடைய தேசிய யுத்த முன்னணி நிலையம் வழக்கம்போல் வெகு திறமையுடனும் உபயோகத்துடனும் நல்ல வேலை செய்து வந்திருக்கிறது. இந்த வழியில் நல்ல வேலை செய்து வந்திருக்கிறவரும், இந்த சபையின்மெம்பரும் மேற்படி முன்னணி சீப் ஆர்கனைசரும் ஆகிய Mr. K. நாகராஜ அய்யருக்கும் தாலுகா ஆர்கனைசருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஈ-தர்பார் அவர்களின் வந்தனம் உரித்ததாகும். தேசிய யுத்த முன்னணி யுத்த சஞ்சிகையையும் 'வி' டைரியையும் தொகுத் தவரான ராவ் பகதூர் N. தியாகராஜ அய்யர் அவர்களுடைய கவனத்தாலும் அக்கரையாலும் அவை ஜனரஞ்சகமாகவும் வெற்றி பெருபவையாகவும் இருப்பதனால் அவருக்கும் வந்தனம்.

7. ஈ-தர்பார் அவர்கள் ஏற்பாடுசெய்து, தேசிய யுத்த முன்னணி நிலையம் சீப் ஆர் கனைசர் மூலமாக நடத்தப்படும் சிறிய சேமிப்பு திட்டமும் நமது சமஸ்தானத்தில் திருப்தி கரமான அளவு நடந்து வருகிறது. இது வரையில் சமஸ்தான ஜனங்கள் அதில் 1,25,456 ரூபாய்களை போட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமான பொருளை இந்த திட்டத்தில் போடு வதற்கு இடமிருக்கிறதென்று ஈ-தர்பார் அவர்கள் நம்புகிறார்கள். நமது சமஸ்தானத்தில் சிறிய தொகைகளை சேமிப்பு செய்யும் ராஜ விசுவாசமுள்ள பிரஜைகளை லாபகரமான இந்த யுத்த முயற்சியில் பொருளைப் போடுமாறு இச்சபை அங்கத்தினர்கள் விரிவாகப் பிரசாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

8. 1941-ம் வருஷத்தில் பெட்ரோல் பங்கீடு உத்தரவை அமுலுக்குக் கொண்டுவந்த பின் சமஸ்தானத்தில் பெட்ரோல் எண்ணைச் செலவில் சிக்கனம் செய்வதில் பஸ் முதலாளி களும் பொதுமக்களும் ஈ-தர்பார் அவர்களுடன் பரிபூர்ணமாக ஒத்து உழைத்திருக்கிறார்கள் என்பதைக்கண்டு நாங்கள் சந்தோஷமடைகிறோம். பங்கீடு காலத்திற்கு முன்னிருந்த செலவில் 87 சதவிகிதம் சமஸ்தானத்தில் மீதப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள எல்லா நிர்வாகங்களையும்விட சமஸ்தானம் அதிக சிக்கனம் செய்திருப்பதற்காக பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஈ-தர்பாரவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள்.

9. அதிக உணவுப்பொருள் அபிவிருத்திக்காக நாம் செய்த தூண்டுதலுக்கு வெகுவாக இணங்கி சமஸ்தானத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. 1353—54 பஸலிகளில் 6,607 ஏக்கர் நிலங்கள் அடமானம் செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு நல்ல அறுவடை கிடைக்கக்கூடிய வகையில் சென்ற பஸலியிலும் நடப்பு பஸலியிலும் உசிதகாலத்தில் போதுமான மழை பெய்யாததற்காக ஈ-தர்பாரவர்கள் வருந்துகிறார்கள்.

10. ரெக்ரூட்டிங் ஆபீஸர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சியின் பிரகாரம் சமஸ்தானத்துக்கு வந்த யுத்த சேவைக்காக ஜனங்களை திரட்டியிருக்கிறார்கள். இந்திய சேனை, இந்திய கடற்படை, இந்திய விமானப்படை முதலியவற்றில் ரெக்ரூட்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியை படங்கள் மூலமாக எடுத்துக் காட்டி சமஸ்தான பிரஜைகளை போதித்து வருகிறார்கள். யுத்த சேவையில் ஈடுபட்டவர்களுக்குக் கிடைக்கும் சௌகரியங்களையும் சமாதான காலத்தில் இந்த பயிற்சிகளால் ஏற்படக்கூடிய உபயோகங்களையும் அவர்கள் ஜனங்களின் மனதில் பதியும்படி எடுத்துச் சொல்லுகிறார்கள். திருச்சினாப்பள்ளியிலும், தஞ்சாவூரிலுமுள்ள ராணுவப் படையினர் இரண்டு வாரத்துக்கு ஒரு முறை சமஸ்தானத்துக்கு வந்து ஒரு நாளை ஊரைச் சுற்றி பார்ப்பதிலும் விளையாட்டுகளிலும் கழித்துப் போவதுண்டு. மாட்சி தங்கிய மன்னர்பிரானும் அவர்களை உபசரித்து வருகிறார்கள், ராணுவ ஆஸ்பத்திரிக்காக திரிச்சினாப்பள்ளியிலுள்ள அரண்மனையையும் மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் விட்டுக்கொடுத்திருக்கிறார்கள்.

11. எதிரி நாடுகளில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நபர்களைச் சார்ந்தவர்களுக்கும் பர்மா, மலேயாவிலிருந்து தப்பி வந்தவர்களுக்கும் தானாக சம்பாதிக்கும் சக்திபெறும் வரையில் ஈ-தர்பார் அவர்கள் போதுமான முன்பணம் கொடுத்து உதவி புரிகிறார்கள். அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி சம்பந்தமாக உபகாரச் சம்பளமும் கொடுத்து வருகிறார்கள். யுத்த சேவையிலுள்ள சிலருக்கு இனாமாக மனைக்கட்டுகளை விட்டுக்கொடுத்திருக்கிறார்கள்.

12. நமது ஹானரரி ராணுவ வெல்பேர் ஆபீஸரும் இந்தச் சபை மெம்பருமான Mr. J. கோசலராம நாயுடு தன்னுடைய அலுவல்களை திறமையுடனும் ஊக்கத்துடனும் கவனித்து வருகிறார்.

13. யுத்தக் கடனுக்காக கெடுக்கண்ட டிபாசிட்டுகளில் பொதுஜனங்கள் இந்தப் பஸலியில் மட்டும் ரூ 5,19,000 டெபாசிட் செய்திருக்கிறார்கள். இதைக் கவனிக்க இந்தத் தகுதியான காரியத்தில் ஜனங்கள் பெருவாரியாக முன்வந்திருப்பது திருப்தியை அளிக்கிறது.

14. ஈவு இரக்கமில்லாமல் பாழாக்கும் இந்த யுத்தம் விரைவில் வெற்றிகரமான முடிவிற்கு வரட்டும்; மாட்சிதங்கிய மன்னர்பிரான் அவர்களுக்கு அரசுரிமை வழங்கப்பெற்ற முதல் வருஷத்திலேயே படிப்படியாய் வளர்ந்துவரும் வரவு திட்டமும் கையிருப்பும் உள்ள இந்த சமஸ்தானம், சமஸ்தானப் பிரஜைகளின் க்ஷேமத்திற்கும், எல்லாத் துறைகளிலும் அவர்களின் வசதியை அதிகரிப்பதற்கும் தீவிரமாகவும் கூர்மையாகவும் நோக்கம் கொண்டிருக்கிற மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்களுடைய நேர்முக ஆட்சியில், இனி பல வருஷ காலங்களும் அமைதியும் செல்வ வளர்ப்பும் பூண்டு வாழட்டும் என்ற தீவிரமான நம்பிக்கையுடனும் வேண்டுதலுடனும் நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

20—3—45 (செவ்வாய்க்கிழமை).	பிரிடிஷ் படைகள் மாண்டலேயைப் பூராவாக ஆக்கிரமித்தன.
	அமெரிக்க 7-வது சேனை சார்பிரக்கனையும் ச்வீபிரக்கனையும் பிடித்தது.
22—3—45 (வியாழக்கிழமை).	அமெரிக்க 7-வது சேனை ஜெர்மனியில் பிர்மாஸன்ஸைப் பிடித்தது.
	அமெரிக்கர்கள் பானேயிக்கு அருகிலுள்ள கிமாராஸைப் பிடித்தார்கள்.
23—3—45 (வெள்ளிக்கிழமை).	அமெரிக்க 3-வது சேனை ரைன் நதியை மேயின்ஸுக்கருகில் தாண்டி விட்டது.
24—3—45 (சனிக்கிழமை).	ஜெனரல் மாண்ட்காமரியின் படைகள் ரைன் நதியைத் தாண்டின.
	ருஷ்யர்கள் ஹங்கேரியில் புடாபெஸ்டுக்குத் தென்மேற்கில் முன்னேறுகிறார்கள்.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—

(1) **பிரிடிஷ் படையும் அமெரிக்க 9-வது சேனையும்**, ரைன் நதியின் கிழக்குக் கரையிலுள்ள வெசல், ரீஸ், பிஸ்லிக் என்ற நகரங்களைப் பிடிக்கும் உத்தேசத்துடன் ரைன் நதியின் நுணி பாகத்தின் இருபக்கத்திலும் ஒரு புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கின்றன. ரைன் நதி தாண்டப்பட்டது. பிரிடிஷ் படைகள் 15 மைல்கள் நீளமும், அமெரிக்க 9-வது சேனை 7 மைல்கள் நீளமும் உள்ள முன்னேறும் வாசலை ஏற்படுத்தியிருக்கின்றன.

பிரிடிஷ் சேனை ரீஸ், ரீஸுக்கு வட கிழக்கிலுள்ள பியனன், வெசலுக்குக் கிழக்கிலுள்ள ப்ருயனென், குருடன்பர்க்கையும் பிடித்தது.

அமெரிக்க **9-வது சேனை** மில்லிங்கனைப் பிடித்தபின் டோர்ஸ்டானுக்குக் கிழக்கிலுள்ள லிப்பிரிதியை அடைந்துவிட்டது.

(2) அமெரிக்க **1-வது சேனை** ரெமேசனில் 35 மைல்கள் நீளமும் 11 மைல்கள் அகலமும் உள்ள பாலமுனையை ஏற்படுத்திவிட்டது. ரைன் நதியைத் தாண்டி அது 59 மைல்கள் முன்னேறிவிட்டது. ஆடோபானில் 9 மைல்கள் கொண்ட பிரதேசத்தைப் பிடித்துவிட்டது. அது நீட் நதியைத் தாண்டிவிட்டது. கிஸ்பாக்கைப் பிடித்துவிட்டது.

(3) அமெரிக்க **3-வது சேனை** ரைன் நதியை ஒப்பன்ஹீமில் தாண்டி 9 மைல் ஆழமும் 12 மைல் நீளமும் உள்ள பாலமுனையை அமைத்துவிட்டது. லட்விக்ஷாபன், ஹானு, பிராங்க்பர்ட்டுக்குள் அது புகுந்தபின் நூரம்பர்க்கை நோக்கி முன்னேறி வருகிறது.

(4) அமெரிக்க **7-வது சேனை** மான்ஹீமுக்கு வடக்கில் ரைன் நதியைத் தாண்டி பிரிமாசென்ஸ், பண்டன்தால், கிரெஹீமைப் பிடித்துவிட்டது.

(5) **பிரெஞ்சுப் படைகள்**.—ரைன் நதியை கார்ஸ்ருகிக்கருகில் தாண்டிவிட்டன.

கிழக்குப் போர்முனை.—

(1) கீழ்க்கண்ட இடங்கள் பிடிப்பட்டன :—

(*a*) ஹெலிகன்பாக், (கோனிக்ஸ்பர்க்குக் கருகில்).

(*b*) சோப்பாட், பிராட்ஸ், ஆலிவா எமாயுயி, கிட்னியா (டான்சிக்குக் கருகில்).

(*c*) கோசல், நீயூஸ்டாட், நிஸி லியோப்ஷாயிட்ஸ் (வடக்கு சைலிஷியா).

(*d*) எஸ்டர்கோம், பெல் சோகால்லா, டாடாபானியா, ஸஸ்காஸ்பெர்வார், வெர்ஸ்பிரெம், நாஸமெலி பெல்ஸ்காடா, டாடா, ராவாஸ்லோட், டாலி, பான்ஸ்கா பிஸ்ட்ரிகா, பாபா, டெவெக்ஸார், (ஹங்கேரி, செகோஸ்லாவேகியா).

(2) கோனியேவ் மோரேவியா இடைவெளிக்கும், மாலினோவ்ஸ்கி, டால்பூகின் பிராடிஸ்லாவா இடைவெளிக்கும் முன்னேறி வருகிறார்கள்.

பிலிப்பைன்ஸ்.—(1) அமெரிக்கர்கள் செபுத்தீவிலிறங்கி விட்டார்கள். கிராமாஸ் தீவிலும் படையெடுத்து விட்டார்கள்.

(2) அவர்கள் லூஸானிலுள்ள கொலானோவையும், பானேயிலுள்ள இலாயிலோவையும் பிடித்து விட்டார்கள்.

பர்மா.—மாண்டலேயிலிருந்து நேசதேசப் படைகள் தெற்கு நோக்கிச் செல்லுகிறார்கள். மியின்ஜான், பிண்டாலி, மின்கேயன், மைத்தா பிடிபட்டன. மெயிக்டிலா பகுதியில் கடும் போர் நடைபெருகிறது.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

18—3—45 (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ராணுவத் தொழிற்சாலை.—பெர்லின் (Berlin).

2 பென்ஸால் நிலயங்கள்.—ஹாட்டிங்ஜன் (Hattingen), போகம் (Bochum)அருகே.

இலக்குகள்.-பிரென்னர் கணவாய் (Brenner Pass).

ரயில்வே.—வியன்னு (Vienna), முதல் யூகோஸ்லாவியா (Yugoslavia).

யுத்த தளவாடக் குவியல்கள்.—மிலான் (Milan).

ரயில்வே தளங்கள்.—மான்ஸா (Monza).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஸியாமிலுள்ள க்ரா இஸத்துமஸ் (Isthmus).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஜப்பானியக் கடல்களில்.

பர்மா (Burma).

ஜப்பானியத் தற்காப்புகள்.—டப்பரின் (Dufferin) கோட்டை.

ஜப்பானிய சைனியங்கள்.—டாங்கியா (Daunggya) நதிக்கரை மேல்.

ஸ்டோர் பிரதேசங்கள்.—தாஷி (Thazi).

பலத்த முனைகள்.—மெய்க்திலா (Meiktila).

ஸப்ளைக் குவியல்கள்.—ஷிபா (Hsipaw).

19—3—45. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே பாலம்.—ஆர்ன்ஸ்பர்க் (Arnsberg).

மற்றொரு பாலம்.—பீல்பெல்டு (Bielefeld).

களஞ்சியம்.-பாமென்ஹிம் (Baumenheim).

விமான நிலயங்கள்.—நீயுபர்க் (Neuberg), லீப்ஹிம் (Leipheim).

தொழிற்சாலை இலக்குகள்.—பிளாயன் (Plauen).

யுத்தத் தொழிற்சாலைகள்.—ஜெனு (Jena).

போக்குவரத்து இலக்குகள்.—ஹாலந்து (Holland).

போக்குவரத்து இலக்குகள்.—ரைன் (Rhine).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—தெற்கு ஜெர்மனி (Southern Germany).

போக்குவரத்துகள்.—வட இதாலி (Northern Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—டோக்கியோவிற்கு அருகிலுள்ள கடல்களில்.

பர்மா (Burma).

ஜப்பானியத் தற்காப்புகள்.—மாண்டலேயிள்ள டப்பரின் கடல்.

ஜப்பானியசைனியங்கள்-அரக்கான் (Arakan).

20—3—45. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே ஸ்தலங்கள் :—ஹாம் (Hamm), ரெக்லிங் ஹஸென் (Reckling-Hausen).

யு படகு தளங்கள்.—ஹாம்பர்க்கிலுள்ள பிளாம் (Blohm), வாஸ் (Voss).

எண்ணெய்க் கிணறுகள்.—ஹெம்மிங்ஸ்டெட் (Hemmingstadt).

இலக்குகள்.-ஹாம்பர்க் (Hamburg).

ரயில் தளங்கள்.—ஆம்ஸ்டெட்டென் (Amstetten), வெல்ஸ் (Wels).

போக்குவரத்துகள் ஸப்ளைக் குவியல்கள்.—வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

தரைமீதுள்ள விமானங்கள்.—யுடென் (Udine), காம்பூபார்மிடா (Campoformido).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பேர்லின் (Berlin).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.-போலன் (Bohlen).

எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—ஹெம்மிங்ஸ்டாட் (Hemmingstadt).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—அமாய் (Amoy).

ஸ்டோர் பிரதேசங்கள்.—சிங்மாய் (Chiengmai).

பர்மா (Burma).

விமான நிலயம்.—பாங்காக் (Bangkok).

பாலங்கள்.—ரங்கூன் (Rangoon), மாண்டலே (Mandalay) பிரதேசம்.

21—3—45. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்து ஸ்தலங்கள்.—கோஸ்பெல்டு (Coesfeld), டேல்மென் (Duelmen).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.-போசேல்ட் (Bocholt).

ரயில் தளங்கள் இலக்குகள்.—விண்டர்லிஜ்க் (Winterswijk), டார்ஸ்டீன் (Dorstein), ஆன்ஹால்ட் (Anholt), இஸ்ஸல்பர்க் (Isselburg), போகோல்ட் (Bocholt), ஹால்டர்ன் (Haltern).

விமான நிலயங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).

கெஸ்டபோ தலைமைக் காரியாலயங்கள்.—கோபன்ஹகன் (Copenhagen).

போக்குவரத்து இலக்குகள்.—ஆஸ்திரியா (Austria), வட இதாலி (Northern Italy).

விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—பிலிப்பைன்ஸிலுள்ள செபு (Cebu).

பைவானேக், ஸப்ளை பிரதேசங்கள்.—செபு (Cebu)விற்கருகில்.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

22—3—45. (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் முன்னேறும் தளங்கள்.—போசோல்ட் (Bocholt), டார்ஸ்டென் (Dorsten), டால்மன் (Dulmen).

ரயில்வே, தொழிற்சாலை பட்டணங்கள்.—ஹில்டிஷீம் (Hildesheim).

'V' தளவாட இலக்குகள்.—நெதர்லாண்டு (Netherlands).

எதிரி விமானச் சண்டைகள்.—வுர்ஸ்பர்க் (Wurzburg), ஆக்ஸ்பர்க் (Augsburg) அருகிலுள்ள விமான நிலயங்கள்.

9 எதிரி நிலயங்களும், 5 எதிரி விமான நிலயங்களும்.—ரூர் (Ruhr) சமவெளி.

போக்குவரத்துகள்.—ரைன் (Rhine) யுத்த அரங்கம்.

விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஸ்டோர்கள் பீரங்கி ஸ்தாபனங்கள் ஸப்ளை துவியல்கள் துருப்பு முகாம்கள்.—வட இதாலி (Northern Italy).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—ஜப்பானிய முக்கிய தளம்.

விமான தளம்.—ஆய்டா (Oita).

ஜப்பானிய சைனியங்கள்.—ஒகினோவா (Okinowa).

ரயில்வே போக்குவரத்துகள்.—ஸியாமை (Siam)ச்சுற்றிலும்.

பர்மா (Burma).

ரயில்வேப் பாலம்.—பர்மா—ஸியாம் (Burma-Siam) ரயில்வே.

கம்பியில்லாத்தந்தி நிலயங்கள்.—கோகோ (CoCo).

விமான நிலயங்கள்.—பாஸ்ஸின் (Bassein), பெட்மூன் (Bedmoon).

கப்பல்கள்.—சுமத்ராவின் வடமேற்குக் கரை.

23—3—45. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—யுத்த தளவாடக் துவியல்கள், பெட்ரோல் துவியல்கள், ராணுவ நிலயங்கள், ஸப்ளை தளங்கள்—வட ஜெர்மன் நிலயங்கள்.

ரயில்வே பாலங்கள்.—பீல்பெல்டுக்கு (Bielefeld) வடகிழக்கு.

துருப்புகள், கோட்டை கட்டப்பட்ட சைனியங்கள்.—ரைனின் கிழ்கரை (East bank of Rhine).

எதிரி விமான நிலயங்கள்.—ரூர் (Ruhr) சமவெளி.

ஜெர்மன்.—டால்ஸி பிஜோர்ட் (Dalse Fjord).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

போக்குவரத்துகள்.—வட இதாலி (Northern Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—பார்மோசாவில் டாய்னன் (Tainan).

கடற்படை தளம்.—ஒகாயாமா (Okayama).

இலக்குகள்.—செபு (Cebu).

பர்மா (Burma).

ஸ்டோர்கள், துவியல்கள்.—மோல்மீனிற்கு தெற்கு (South of Moulmein).

துருப்பு முகாம்கள்.—மெய்க்திலா (Meiktila).

இலக்குகள்.—ஹோபாங்க் (Hopong).

6 பாலங்கள்.—ரங்கூன் (Rangoon) மாண்டலே (Mandalay).

விமான நிலயங்கள்.—ரங்கூன் (Rangoon).

24—3—45. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.-நான்கு விமான நிலயங்கள்-ரூர் (Ruhr).

போக்குவரத்துகள் அரண்கள்.—வடமேற்கு ஜெர்மனி.

எண்ணெய் சுத்தம் செய்யும் இடங்கள்.—ஹார்பனெர்வக் (Harpenerweg).

பேன்ஸால் நிலயங்கள்.—பொட்ராப் (Bottrop).

டாங்கி தொழிற்சாலை.—பெர்லின் Berlin).

இரு விமான தளங்கள்.—நியூபர்க் (Neuburg), ரெய்ம் (Reim).

ரயில் தளங்கள்.—புடிஜாவிஸ் (Budejavice).

விமானச்சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

போக்கு வரத்துகள்.—ஆஸ்திரியா (Austria), வட இதாலி (N. Italy).

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—கியாக்யூ (Ryukyu) தீவு.

ஜப்பானியசைனியங்கள்.-மாயாகோ (Myako).

பர்மா (Burma).

துருப்பு.—லாய்—ஹாலா (Lai-Hla).

இலக்குகள்.—ஹெய்பாமின் (Heipam) தென்கிழக்கு.

ரஸ்தாப் பாலங்கள்.—டவுன்கூ (Toungoo) திவாட்டி (Thawatti).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

19—3—45. (திங்கட்கிழமை)

பிரிடன் (Britain),

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

20—3—45. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (S. England).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

21—3—45. (புதன்கிழமை).

to

25—3—45. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain),

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

வெற்றி நிச்சயம். கால சக்கரம் எவ்வளவு வேகமாகச் சுழன்றுவந்து பழி வாங்குகிறது பாருங்கள். அதிர்ஷ்ட சக்கரமும் எவ்வளவு வேகமாகச் சுற்றிவருகிறது. சொல்ப காலத்துக்குமுன் ஜெர்மனியின் சக்தி ஐரோப்பா பூராவிலும் வியாபித்தது. நாடெங்கும் பீதியும், கவலையும், சந்தேகமும், துயரமும் நிரம்பியிருந்தது. சர்ச்சிலும், ஸ்மட்ஸும் மட்டும் தைரியத்துடன் பேசிவந்தார்கள். நமது சமஸ்தான திவானாகிய ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாமும் பின்வருமாறு சொல்லி வந்தார். "பயப்படாதீர்கள். நம்பிக்கையுடன் இருங்கள். மூலையைத் திரும்பிவிடுவோம். தனிப்பட்ட சம்பவங்களைப் பொருட்படுத்தாதீர்கள். யுத்தத்தின் பொதுவான போக்கை கவனியுங்கள். நேசதேசத்தார்கள் வெற்றி பெறுவார்கள், வெற்றிபெற வேண்டும்."

இன்று அந்த வார்த்தைகள் புத்திசாலித்தனமானவை என்று புலப்பட்டுவிட்டது. துக்கத்திலிருந்து நமக்கு குதூகலப்படும் சமயம் ஏற்பட்டுவிட்டது. நெப்போலியன் செய்த யுத்தத்தின் முடிவுகாலத்தைப்போல் வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்து வருகின்றன. இன்னும் இறுதி வெற்றி நமக்குக் கிடைக்கவில்லையென்றாலும் வெற்றி நிச்சயமாகிவிட்டது. அதுவும் இனிமேல் தவிர்க்க முடியாததென்றும் உறுதியாகிவிட்டது. இது நேசதேச சமாஜத்தின் அரிய செய்கையாகும்.

வட ஆபிரிக்கா விடுவிக்கப்பட்ட பின்னும் தெற்கு இதாலி கைப்பற்றப்பட்ட பின்னும், இரண்டாவது போர்முனையைப்பற்றிக் கேலியாய்ப் பேசியவர்களுமுண்டு. ஜூன் மாதத்தில் படைகள் இறங்கிய பின்னும் மேற்கில் ஜெர்மனியின் பலம் மகத்தானதென்றும் அநேகர் சொல்லிவந்தார்கள். இப்பொழுது அட்லாண்டிக் அரணும், ஸீக்பிரட் அரணும், ரைன் நதித் தடங்கலும் நொருங்கிவிட்டன. கூடிய சீக்கிரத்தில் மேற்குப் போர்முனை மறைந்து, கிழக்குப் போர்முனையுடன் ஒன்றுபட்டுவிடும். அப்பொழுது கிழக்கு, மேற்கு என்ற போர்முனைகள் காணப்படாது. ஜெர்மனியைச் சுற்றி ஒரே வளையம் காணப்படும்.

வி வி வி வி வி

ரைன் நதியைத் தாண்டுவது. இந்த வாரத்தில் ரைன் நதியை நேசதேசப் படைகள் பல இடங்களில் தாண்டிவிட்டன. இரண்டு வாரங்களுக்கு முன் அமெரிக்க 1-வது படை ரெமேஜனில் ரைன் நதியைத் தாண்டியபின் பிரிடிஷ், அமெரிக்க 9-வது சேனை வெஸலிலும், அமெரிக்க 3-வது சேனை ஒப்பன்ஹீமிலும், அமெரிக்க 7-வது சேனை மான்ஹீமிலும், பிரெஞ்சு சேனை கார்ல்ஸ்ருகியிலும் ரைன் நதியைத் தாண்டிவிட்டது. ஜெனரல் பிராட்லி சொல்லுவதுபோல இப்பொழுது ரைன் நதியை ஒருவர் எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் தாண்டிவிடலாம்.

வி வி வி வி வி

மாண்ட்காமரியின் மகத்தான தீரச் செய்கை. அதன் நடப்பு பின்வருமாறு. அநேக வாரங்களாக சும்மா இருந்த பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி சென்ற வெள்ளிக்கிழமையன்று திடீரென்று தாக்க ஆரம்பித்து விட்டான். இந்த நடவடிக்கையை சென்ற வருஷத்தில் D. தினத்தன்று நார்மண்டி கடற்கரையில் படைகள் இறங்கிய நடவடிக்கைக்கு ஒப்பிடலாம். அதற்குமுன் நான்கு நாட்கள் வரையில் விமானங்கள் குண்டுகளை வீசின. அவனுக்கு உதவியாக பீரங்கிகளும் பலமாக குண்டுகளை வீசின. தரைப் படையும், ஆகாயப் படையும் ஒத்துழைத்தன. படைகளுக்கு மாண்டி பின்வருமாறு சொன்னான். "நாம் ரைன் நதியைத் தாண்டுவோம். கிழக்குப் பக்கத்தில் நமக்கு நல்ல வேட்டையிருக்கிறது. யுத்தத்தில் நமக்கு ஈஸ்வரன் வெற்றியை அளிப்பாராக". பிரிடனின் பிரதம மந்திரி காமன்ஸ் சபையை விட்டுக்கிளம்பி வெஸல் பாலத்துக்குச் சென்று, ஸோல்ஜர்களை உத்சாகப்படுத்தினார். அதன் பின் அவர் குண்டு வீச்சு மத்தியில் பாலத்தையும் தாண்டினார். ரைன் நதியிலும் ஒரு நாள் சஞ்சாரம் செய்தார்.

இவ்விதமாக வேட்டை ஆரம்பித்தது. மாண்ட்காமரியின் படைகள் வடக்கு ஜெர்மனியில் துரிதமாக முன்னேறுகின்றன. ரைன் நதியை ஒட்டி மற்ற படைகளும் முன்னேறுகின்றன. பாலாய் நடவடிக்கை மறுபடியும் துவங்கிவிட்டது. மாண்ட்காமரி ரூர் பிரதேசத்தில் போர் புரிகிறான். பர்த்தரப்பு செய்யப்பட்ட ரூண்ட்ஸ்டெட்டுக்கு பதிலாக நியமிக்கப்பட்ட கெஸ்ஸல்ரிங்க் வெஸல் பிரதேசத்துக்கு நான்கில் மூன்று பங்கு சேனைகளைக் கொண்டு போய் தெற்குப் போர்முனையை பலஹீனப்படுத்திவிட்டான். தவிர்க்க முடியாதது சம்பவித்தது. ஒன்றன்பின் ஒன்றாக அமெரிக்கப் படைகள் யாதொரு எதிர்ப்பன்னியிலும் பீரங்கி உதவியன்னியிலும் விமான ரக்ஷணையன்னியிலும் ரைன் நதியைத் தாண்டின. படை

கள் ரைன் நதியை ஆறு இடங்களில் தாண்டிவிட்டன. இவ்விதமாக மாண்ட்காமரியின் தாக்குதல் மூலமாக எல்லாப் போர்முனையிலும் வெற்றி கிடைத்துவிட்டது.

ஜெர்மானியர்கள் பின்வாங்கி ஓடுகிறார்கள். இந்த நடவடிக்கைகளில் 1,00,000 பேர்களை இழந்த ஜெர்மன் சேனை நேசதேசத்தாரின் விளையாட்டுக்கருவியாக ஆகிவிட்டது. முன்னேறும் வாசல்கள் துரிதமாக பலப்படுத்தப்படுகின்றன. அமெரிக்க 3-வது சேனை பிராங்க்பர்ட்டுக்குள் நுழைந்துவிட்டது. நூரம்பர்க்கிக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. ரூர் பிரதேசமும் சார் பிரதேசமும் நமது வசமாகிவிட்டன.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. பால்டிக்கிலிருந்து யூகோஸ்லாவியா வரையில் மார்ஷல் கொனியெவின் விலாப்பக்கங்களை சுத்திசெய்ய நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. மத்திய ஓடர் பிரதேசத்தில் தாக்குவதற்காக இந்த நடவடிக்கைகள் அவசியம். வடக்கில் கோனிக்ஸ்பர்க்கிலும் டான்சிக்கிலுமுள்ள ஜெர்மன் படைகள் அழிக்கப்படுகின்றன. கிட்னியா விழுந்துவிட்டது. ஓடர் நதியிலுள்ள ஆல்ட்டாம் ஸ்டெட்டின் சுத்திசெய்யப்பட்டுவிட்டது. வடக்கு ஸைலீஷியாவில் தெற்கு நோக்கிச் சென்ற கோனியேவ் வியன்னாவுக்குப் போகும் மோராவியா இடைவெளியைத் தாண்டிச் சென்றுவிட்டான். செகோஸ்லவேகியாவுக்குச் செல்லும் வழியிலுள்ள சுடேடன் மலைகளை சமீபித்து விட்டான். ஹங்கேரியில், இரண்டு பகுதிகளாக ஆஸ்திரியாவுக்கும் போகும பிராடிஸ்லாவா இடைவெளிக்கு படைகள் முன்னேறிவருகின்றன.

வி வி வி வி வி

பஸிபிக். பிலிப்பைன்ஸில் ஆக்கிரமிக்கப்பட்ட தீவுகளிலுள்ள ஜப்பானியர்கள் துடைக்கப்படுகிறார்கள். செபுத்திவில் படைகள் இறங்கிவிட்டன. பஸிபிக்கில் எல்லா இடங்களிலும் முன்னேற்றம் வலுவடைந்து வருகிறது.

ஐவோஜிமாவைக் காக்க முடியாத ஜப்பானிய கமாண்டர் தற்கொலை செய்துகொண்டான்.

வி வி வி வி வி

மாண்டலே. இதை மீட்டது பர்மாப் போரில் ஒரு சிறந்த கட்டமாகும். டப்பரின் கோட்டை பிரதேசத்தில் எதிர்ப்புக்குப்பின் அந்த நகரம் விழுந்தது. அதை விடுதலைசெய்த புகழ் 19-வது இந்திய டிவிஷனுக்கு உரித்ததாகும். அந்தப்படை இராவதியின் வடக்குப்பக்கத்திலுள்ள பாலமுனையின் வழியாக நகரக்குள் நுழைந்தது. அதற்கு பிரிடிஷ் 2-வது டிவிஷன் ஒத்தாசைசெய்து தெற்குப் பக்கத்தில் ஆவா, அமராபுரா வழியாக நுழைந்தது.

நேசதேசப் படைகள் மாண்டலேயிலிருந்து தெற்கு நோக்கி முன்னேறுகின்றன. போர் இப்பொழுது மாண்டலே, மெய்க்டிலா, மியன்கான் முக்கோணத்தில் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

கோதுமைக்காகப் போர். சைனாவில் ஜப்பானியர்கள் ஹாங்கெவுக்கு வடமேற்கில் புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். தெற்கு ஹோனானிலும் வடக்கு ஹூபேயிலுமுள்ள கோதுமையை உத்தேசித்து ஜப்பான் போரைத் துவக்கியிருக்கிறது. நேசதேசப்படைகள் சைனாவில் இறங்கினால் அதைத் தடுப்பதற்கும் ஆயத்தம் செய்யும் முறையில் இது தற்காப்புப் போராகவும் தோன்றுகிறது.

வி வி வி வி வி

சில்லரை விஷயம். யுத்தம் மேற்கிலிருந்து கிழக்குக்கு மாறிவிடும் தருவாயில் இந்தியாவும் முக்கியமான தளமாக மாறிவிடுகிறது. ஏராளமான துருப்புகள் இந்தியாவுக்கு வரும். அவைகளைப் போஷிப்பது மகத்தான பிரச்னையாகும். இதை உத்தேசித்துத்தான் வேவல் பிரபு லண்டனுக்குச் சென்றிருக்கிறார் என்று நம்பப்படுகிறது.

வி வி வி வி வி

ஸ்பெயினும் ஜப்பானும். ஜப்பானை எதிர்த்து ஸ்பானிஷ் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்து வருகின்றன. பிலிப்பைன்ஸில் ஸ்பானிஷ் பாதிரிகள் துன்புறுத்தப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. டிமார் சம்பந்தமாக போர்ச்சுகலுக்கும் மனவருத்தம் ஏற்பட்டிருக்கிறது. ஐபீரியா ஒப்பந்தத்தின்படி இரண்டும் ஒன்று சேர்ந்து ஜப்பானுடன் உள்ள உறவை ரத்து செய்யக்கூடும்.

நடைமுறைக்குறிய சமாதான முயற்சி.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் பிரச்னைகள்.

(டைம்ஸ் பத்திரிகை.)

சுதந்திரத்தினுடையவும் ஒழுங்குமுறையினுடையவும் பாத்தியங்களை சமரசப்படுத்துவதும் சுதந்திரம் அராஜகமாகவும் ஒழுங்குமுறை கொடுங்கோன்மையாகக் கெட்டுப்போகாமலும் செய்வதும்தான் ஒவ்வொரு அமைக்கப்பட்டிருக்கும் ஜனசமூகத்தினுடையவும் தொடர்ச்சியான வேலையாகும்.

இந்தப் பிரச்னைதான் ஏற்படான சர்வதேச ஸ்தாபனத்தை அமைக்கும் தருவாயில் அதன் முன் நிற்கின்றது. சர்வதேச சங்கத்தை ஸ்தாபித்தவர்கள் தேசங்களின் உரிமைகளை ஜாக்கிரதை செய்ததினால் அவர்கள் திறமையுள்ள ஒழுங்கு முறையை ஏற்பாடுசெய்ய முடியவில்லை. டம்பார்டன் ஓக்ஸ் திட்டத்தை நிறுவிய பிரமுகர்கள் இந்தத் தவறுதலை வெகு ஜாக்ரதையுடன் செய்யாமலிருந்துவிட்டார்கள். ஆனால் அவர்களும் தேசிய உரிமைகளை பாதிக்கும் வரையில் ஒழுங்கு முறைக்கு பிராபல்யம் கொடுத்துவிட்டார்களென்ற குற்றச் சாட்டுக்குப் பாத்திரமாகிவிட்டார்கள். இவ்விரண்டுக்கும் சமத்வத்தைத் தேடுவதுதான் இப்பொழுது அத்யாவசியமாகும்.

எல்லாவித அரசியல்களிலும் ஜனநாயகத்துக்குறிய கொள்கைளை பிரயோகிப்பதுதான் மிகவும் சிரமசாத்தியமான காரியம். சரித்திரத்தில் இதுவரையில் அந்தக் கொள்கைகள் பொதுவான உணர்ச்சி, ஐதீகம், அக்கரை முதலியவற்றினால் பலமாக இணைக்கப்பட்ட சில நாடுகளில்தான் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுவந்திருக்கின்றன. இந்தக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட உலக நிர்வாகத்தை நடத்த பலமான ஒற்றுமையுள்ள சமாஜத்தை ஏற்படுத்துவதென்பது நல்ல யோசனைதான். அதற்காகப் பாடுபடுவதும் அவசியம்தான். நியாயமானதும்தான். டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டு பிரச்னைகளையும், கிரிமியா மகாநாட்டு முடிவுகளையும், அந்த திட்டங்கள் போதுமான சக்திபெற்ற சர்வதேச ஸ்தாபனத்தை வெற்றிகரமாக அமைக்க அவைகள் சிறந்த நம்பிக்கையை ஊட்டுமா என்ற உரைக்கல்லில் வைத்துத்தான் பரசோதித்துப் பார்க்கவேண்டும். எந்த நிர்வாகமும் ஒழுங்கு முறையை பரிபாலிப்பதுதான் முதல்தரமான நடவடிக்கை என்று கருதவேண்டும். இந்த ஒழுங்கு முதலில் ஏற்பட்டால் நிர்வாகத்தின் மற்ற முற்போக்கான சீர்திருத்த நடவடிக்கைகள் துவக்கமாகும்.

மற்ற நிர்வாக அமைப்புகளைவிட ஜனநாயகம் என்பது தானாக உருவானது. நிலைமையுள்ள நிர்வாகங்கள் ஜனசமூகத்திலுள்ள இரண்டு சக்திகளை சமப்படுத்தியதின்மூலம் அமைக்கப் பட்டுள்ளன. கிரிமியா மகாநாட்டின் முடிவுகள் டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் திட்டங்களைப் பூர்த்திசெய்ததுடன் மேலே சொல்லிய விவகாரத்துக்குறிய முறையையும் திருப்தி செய்திருக்கின்றன. அந்த முடிவுகளின் பிரகாரம் பெரிய வல்லரசுகள் எல்லாம் அவர்களை பாதிக்கக்கூடிய விவகாரங்களை உலக பத்திர சபைமுன் வைத்து சர்ச்சை செய்வதென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் குறித்து அமுல் நடத்தப்படும் கேஸ்களில் அவர்களுக்கு அதை ரத்துசெய்யும் அதிகாரம் மட்டும் உண்டு. ஆனால் இந்த உதறிதளும் உரிமை எந்த சர்வதேச ஸ்தாபனத்தின் தன்மைக்கும் உரித்ததாகும்.

டம்பார்டன் ஓக்ஸ் திட்டம் ஒரு சிறந்த லக்ஷியம்தான். அநேக காலம்வரையில் சர்வதேச சமாதானத்தையும் பத்திரத்தையும் பரிபாலிக்கக்கூடிய சர்வதேச ஸ்தாபனத்தை உண்டுபண்ணுவோமென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த லக்ஷியம் முக்கியமான தேசங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டால்தான் நடைபெறும். ஆகிலும் அதில் சிறிய, அல்லது பெரிய தேசங்களுக்கும் பொதுப்படையான அக்கரை உண்டு. அது நல்லெண்ணம் கொண்டது. ஏனெனில் அது சாதிக்கக்கூடிய அளவுக்கு மேல் ஒன்றையும் தருவதாக வாக்களிக்கவில்லை. பெரிய வல்லரசுகள் சண்டையிட்டுக்கொண்டாலும் யுத்தம் மூளாதென்று அது ஒருவிதமான உத்தரவாதமும் செய்யவில்லை. ஏனெனில் இவ்வித உறுதியை எந்த ஸ்தாபனமும் எந்த ஒப்பந்தமும் அளிக்கமுடியாது. ஆகிலும் பெரிய வல்லரசுகளுக்குள்ளும் மற்ற சமாதானத்தை விரும்பும் நாடுகளுக்குள்ளும் அந்த திட்டத்தை நிறைவேற்றும் முறையில் பொதுவான அக்கரையையும் பொறுப்பையும் ஏற்படுத்து முன் அந்தக் கஷ்டம் மறுபடியும் சம்பவிக்காமல் தடுக்கக்கூடிய ஒரு நம்பிக்கையை அது உண்டுபண்ணுகிறது.

சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் திட்டத்தின் முக்கியஅம்சம் யாதெனில் அது நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவரக்கூடியது. அதற்கு சக்தியை அளிக்கக் கூடிய வல்லரசுகள் அதை ஒப்புக்கொண்டுவிட்டார்கள். எவ்வளவு அறுகுறையாக இருந்த

போதிலும் அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு திட்டம்தான் உலகத்தின் மோக்ஷத்திற்கு அடிப்படையான, அத்தியாவசியமான நிபந்தனை. இந்த திட்டம் வேலை செய்யாதபோனால் அதன் அமைப்பின் பரிஷ்காரம் அதன் பலஹீனத்தைக் காப்பாற்றிவிடமுடியாது. அல்லது உலகத்தையும் கெடுதலிருந்து காப்பாற்றிவிடமுடியாது. அது நல்ல முறையில் வேலை செய்துவந்தால் ஆரம்பகாலத்தில் அறைகுறையாக விளக்கப்பட்ட எண்ணங்கள் அபிவிருத்திக்கு அதிக அவகாசத்தையும் வியாபகத்தையும் அது தந்துவிடும். ஏனெனில் காலக்கிரமத்தில் உலக பத்திரமும் நம்பிக்கையும்தான் சர்வதேசங்களுக்குள் நியாயமும், தாராள மனப்பான்மையும், பொறுப்பும், பொருமையும் வளர்ச்சிபெற அடிப்படையாக இருக்கும். மேலும் அவைகள்தான் இதுவரையில் சித்திபெறாத, வெகுகாலமாக தியானத்திலிருந்துவரும் மானிட வர்க்கத்தின் ஒன்றுமையை யதார்த்தமாக்கும்.

இறுதி வெற்றிக்கான தாக்குதல்களுக்குத் தயாரிப்பு.

நேசதேச சாமான் கப்பல்கள் பத்திரமாகச் செல்லுகின்றன.

(பிரியான் டன்ஸ்டால்.)

பார்லிமெண்டில் கடற்படை சம்பந்தமான திட்டத்தை சமர்ப்பித்தபொழுது பிரிடனில் கடற்படை இலாகா முதல் பிரபு வெளியிட்ட அறிக்கையும், பிப்ரவரி மாதத்திய யூ படகு நடவடிக்கையைப்பற்றி பிரிடனும், அமெரிக்காவும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையும் பிரிடிஷ் கடற்படையின் வேலையின் விபரத்தை வெளிப்படுத்துகின்றன. பஸிபிக்குக்கு ஏராளமான பிரிடிஷ் கப்பல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் ருஷ்யாவுக்கும் மேற்குப் போர் முனைகளுக்கும் செல்லும் சாமான் கப்பல்களை வழிமறிக்கும் யூ படகுகள் பலமாகத் தாக்கப்பட்டு வருகின்றனவென்று தெரிய வருகிறது.

சென்ற வருஷ நடவடிக்கையை விமர்சனம் செய்தபொழுது கடற் படை முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொன்னார். நார்மண்டியில் D தினத்தன்று படைகளை இறக்கிய துணிவுகரமான நடவடிக்கை எல்லாப் போர் முனைகளிலுள்ள பிரிடிஷ் கடற்படைக்கு அதிக சிரமத்தைக் கொடுத்தது. யூ படகுகளின் அபாயம் இன்னும் நீங்கியபாடில்லை. அவைகளும் சமீப காலத்தில் கனடா, ஐஸ்லாந்து, நார்வே, ஜிப்ரால்டர், மேற்கு ஆபிரிக்கா, கடற்கரைக்கருகிலும் இந்து மகா சமுத்திரத்திலும் நடமாடியிருக்கின்றன.

யூ படகுகள் 1944-ம் வருஷ ஆரம்பத்தில் ருஷ்யாவுக்குச் சென்ற 2 மிலியன் டன்கள் சர்ப்பராக்கள் நிறம்பிய சாமான் கப்பல்களை பலமாகத் தாக்கின. யுத்த ஆரம்பத்திலிருந்து அது உள்பட 4 மிலியன் டன்கள் சமான்கள் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவ்விதமான ருஷ்யாவுக்குச் செல்லும் சாமான் கப்பல்களுக்கு இப்பொழுது விமானந் தாங்கிகளில் செல்லும் பிரிடிஷ் அமெரிக்க விமானங்களின் புதிய ரகங்கள் ஒத்தாசை செய்து வருகின்றன.

D தினத்துக்காக செய்யப்பட்ட மகத்தான ஏற்பாடுகளைப்பற்றி முதல் பிரபு பின்வருமாறு சொல்லுகிறார் :—படைகளை இறக்குவதற்காக கப்பல்களும் படகுகளும் கட்டப்பட்டன. மொத்தமான 60 ரகமுள்ள 4,066 கப்பல்கள் படைகளை இறக்குவதில் ஈடுபட்டன. பிரிடிஷ் கடற்கரையில் கப்பல்களில் ஏற்றுவதற்காக பிரம்மாண்டமான காங்கிரீட் அமைப்புகளும் தயாரிக்கப்பட்டன. படகுகளில் சாமான் ஏற்றும் பொழுதும் எண்ணெய் நிறப்பும் பொழுதும் தங்குவதற்காக டொல்பின்கள் தயாரிக்கப்பட்டன. பின் அணியில் தாத்காலிகமான ஸ்டேஷன்களும் படைகளை ஏற்றுமிடங்களில் முன்னணி ஸ்டேஷன்களும் சீர் பார்க்கும் தளங்களும், பழுது பார்க்கும் சாலைகளும், தலைமைக் காரியாலயமும் அவசரத்திற்குரிய வெடி மருந்துக் குவியல்களும் அமைக்கப்பட வேண்டியிருந்தன.

பிரிடிஷ் நீர்மூழ்கிகளும் லேசான கடற்கரைப் படைகளும் சிறந்த சேவை செய்து வருகின்றன. அதிலுள்ள ஆபீஸர்கள் மாலுமிகளின் 90 சத விகிதம் யுத்தத்துக்கு முன் பொது மக்களாகத்தானிருந்தார்கள்.

சுரங்க வெடிகளை அகற்றும் போரில் பிரிடிஷ் சுரங்கவாரிக் கப்பல்கள் யுத்த ஆரம்பத்திலிருந்து 15,000 சுரங்க வெடிகளை அகற்றியிருக்கின்றன.

சாம் ராஜ்ய கடற் படைகளும் அபிவிருத்தியடைந்து வருகின்றன. முக்கியமாக கனடியப் படைக்கு பிரிடன் ஆறு அங்குல வாயுள்ள பீரங்கிகளுள்ள இரண்டு சஞ்சாரிகளையும், இரண்டு நாசகாரிகளையும் 6 துணைக்காவல் நாசகாரிகளையும் தானம் செய்திருக்கிறது.

இதே சமயத்தில் சர்ப்பராக்களைக்கொண்டுபோகும் கப்பல்களுடன் ஒரு சக்தி வாய்ந்த கடற்படையைத் தூரக் கிழக்குக்கு அனுப்ப மகத்தான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

ஜெர்மனியை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்க தரைப் போரையும், ஆகாயப் போரையும் நடத்த உதவியளிக்கும் முறையில் பிரிடிஷ் கடற் படை கடல் மார்க்கங்களைக் காபந்து செய்ய முயற்சி செய்து வருவதை முறியடிக்க ஜெர்மனி தீவிரமான முயற்சிகளைச் செய்து வருகிறதென்பது, யூ படகு நடவடிக்கையைப்பற்றி பிரிடனும், அமெரிக்காவும் வெளியிட்டிருக்கும் பிப்ரவரி மாதத்திய கூட்டறிக்கையிலிருந்து வெளியாகும். நேசதேசத்தாரின் கப்பல் நஷ்டம் மிதமான தென்றும் ஜனவரி மாதத்தைவிட அதிகமான ஜெர்மன் யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகிலும் பிரிடிஷ் கடற்படை இடைவிடாது கண்காணிப்புச் செய்து வரவேண்டும் ஏனெனில் நீர்மூழ்கிகள் மிகுதியான எந்த எதிரியும் அபாயம் பொருந்தியவன். இடைவிடாத கண்காணிப்பு என்பது துணைக்காவல், ரோந்து, பிரிடிஷ் அமெரிக்க, கனடிய, மற்ற நேசதேசக் கப்பல்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லும் பிரயாணத்தை பத்திரப்படுத்துவதென்று பொருள்படும். மேலும் விமானந் தாங்கிகளில் செல்லும் விமானப் படையும் எல்லாவிதமான கால நிலையிலும் ஆர்க்டிக் சமுத்திரத்திலும் உஷ்ணந்த ரேகை பிரதேசங்களிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இவைகளில் ஈடுபட்டிருக்கும் படைகளைத் தவிர அவைகளுக்கு உதவ ஏராளமான கடற்படை தளங்களும், விமான தளங்களும், அவைகளில் வேலை செய்யும் படைகளும் தேவைப்படும். படைகளுக்குக்கொண்டுபோகும் பெட்ரோல் மற்ற தேவைகளை ஏற்றிச் செல்லும் சாமான் கப்பல்களைக் காப்பாற்றுவதும் யூ படகுகளை எதிர்க்கும் படைகளின் பொறுப்பாகும்.

சமீப காலத்தில் ஸெயிண்ட் தாமஸ் என்ற கனடிய நீர்மூழ்கியைத் தாக்கும் கப்பல் அட்லாண்டிக்கில் வந்துகொண்டிருந்த துணைக்காவல் கொண்ட கனடிய கப்பற் கூட்டத்தை தாக்க ஒளிந்து கொண்டிருந்த ஒரு யூ படகை மூழ்கடித்தது. ஸெயிண்ட் தாமஸ் கப்பலும் ஸிகிளிப் என்ற கனடியப் போர்க் கப்பலும் காப்டன் உள்பட 55 பேர்களைக் காப்பாற்றினர்கள்.

பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த வெர்வென், ப்ளூபெல் என்ற நீர்மூழ்கிகளை அழிக்கும் கப்பல்கள் நஷ்டமாகிவிட்டனவென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவைகள் யூ படகு தாக்குதலினல் ஏற்பட்டன என்று சொல்லுவதற்கு யாதொரு முகாந்திரமுமில்லை.

மார்ச்சு மாதம் 8-ம் தேதியன்று ஜெர்மனியில் யூ படகுகளைக் கட்டும் முக்கியமான தளம் நேராகத் தாக்கப்பட்டது. அன்று பிரிடிஷ் கமாண்டைச் சேர்ந்த விமானப் படை ஹாம்பர்க்கிலுள்ள புளோம், வாஸ் தொழிற்சாலைபேரில் நேராகக் குண்டுகளைப் போட்டது.

மேலும் பிரிடிஷ் விமானப் படை நார்வே, ஹாலந்துக்குச் சமீபத்திலுள்ள சமுத்திரங்களை ஜெர்மனி உபயோகிக்காமலும் தடைசெய்து வருகிறது. கடற்கரை கமாண்டைச் சேர்ந்த மஸ்கிடோ விமானங்கள் காட்டிகாட்டில் ஏராளமான சாமான்கள் ஏற்றியிருந்த பெரிய. கனமான மோட்டார் படகுகள் கொண்ட ஒரு ஜெர்மன் கப்பல் கூட்டத்தைத் தாக்கின. எல்லாம் மூழ்கடிக்கப்பட்டன அல்லது தீப்பற்றி எறிந்துகொண்டிருந்தன. அவுட்வாணங்களைப் போடும் பொபைடர் விமானங்கள் மிட்குலன் விளைகுடாவிலிருந்த மூன்று சாமான் கப்பல்களுக்கும் கவசம் பூண்ட இழுப்புப் படகுக்கும் தீ மூட்டிவிட்டன. கடற்கரை சமாண்டைச் சேர்ந்த வெடி விமானங்கள் பிரிஸியன் தீவுகளுக்கருகில் ஒரு ஜெர்மன் கடற்கரைக் கப்பலை மூழ்கடித்தன.

ஆட்ரியாடிக் கடலில் வடக்குப் பகுதியில் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த லேசான கடற்கரைப் படகுகள் எதிரியின் கடற்கரைக் கப்பல்களைத் தாக்கிவருவதுடன் நேசதேச ஸப்ளைகளின் சலனத்துக்கும் கடற்கரை ஓரமாக நேசதேச நடவடிக்கைக்கும் ரக்ஷணையளித்து வருகின்றன. ஆர்ஸாக் கால்வாயில் எதிரியின் கப்பல்களில் ஒரு கப்பல் மீன் வெடிக்கு பலியாயிற்று. மற்ற மூன்று கப்பல்கள் பழுதுபட்டன.

ரைன்லாந்தைத் தாண்டியதில், விமானப்படையின் பங்கு.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் விமான நிருபர்).

மேற்குப் போர்முனையில் போக்குவரத்துகளையும் எண்ணெய் ஸப்ளைகளையும் தாக்கும் நேசதேச ஸ்ட்ராடஜிக் விமான நடவடிக்கையின் பயன்கள் புலப்படுகின்றன.

ரைன் நதியை ரெமேகனில் அமெரிக்கர்கள் தாண்டிய பொழுது ஜெர்மனியின் எதிர்ப்பு பலஹீனமாக இருந்ததிலிருந்தே ஜெர்மன் படைகளின் சலன சக்தி குறைந்து விட்டதென்பது வெளியாகும். பிரிடிஷ் படைகளிருக்கும் முனையில்தான் அதாவது 100 மைல் தாண்டி உள்ள இடத்தில் தான் ரைன் நதியை எதிரிகள் தாண்ட முயலுவார்களென்று நினைத்து அதைத் தடுக்க ஜெர்மனி தயாராக இருந்ததென்று வைத்துக்கொண்டாலும் ஜெனரல் ஹாட்ஜஸின் முன்னேற்றத்தை ஜெர்மனி தடை செய்யாததற்கு யாதொரு காரணமும் புலப்படவில்லை. 100 மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்திற்கு சாமான்களையும் படைகளையும் கொண்டு போகக்கூடிய போக்குவரத்து சாதனங்கள் ஜெர்மனிக்குத் தேவைப்பட்டன. இதற்கு காரணம், ரைன் நதிக்கு அருகிலுள்ள இருப்புப்பாதைகள் சீர்கெட்டுப்போய் விட்டன. ரஸ்தாவில் செல்லும் வண்டிகளுக்கு எண்ணெய் கிடையாது.

இந்த அசைவுற்றிருக்கும் தன்மை ஒவ்வொரு நடவடிக்கையிலும் காணப்படுகிறது. வடக்கில் ரெக்வால்ட்காட்டை ஜெனரல் கிரெரார் தாண்டிச் சென்ற பொழுது எதிரிகள் எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. கொலோனையும் பான் பிரதேசத்தையும் படைகள் தாக்கிய பொழுது ஜெர்மனி பலமாக எதிர்க்கவில்லை. காப்ளென்ஸுக்குப் படைகள் முன்னேறிய பொழுதும் ஜெர்மனி யாதொருவிதமான தற்காப்பையும் செய்யவில்லை.

ஜெர்மனியர்கள் முன்கூடியே கவசம் பூண்ட படைகளையும் சர்பராக்களையும் சேமித்து வைத்திருக்கும் இடங்களைத் தவிர மற்ற இடங்களில் மேற்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள் பதில் தாக்குதலைச் செய்ய முடியாதபடி பாம்பர் படைகள் செய்து வருகின்றன.

சாவதானமாக வெடிகுண்டுகளைப் போடுவதை இடைவிடாது நடத்தி வந்தால்தான் இந்த நிலமை ஏற்படும். கனமான வெடி விமானங்கள் கால அட்டவணைக்கு முன் சென்று விட்டனவென்று சாக்ஷியமும் கிடைத்து வருகிறது. அவைகள் எண்ணெய் சுத்தி செய்யும் சிறிய சாலைகளையும் தாக்கி அழித்து வருகின்றன. பிரிடிஷ் விமானப் படையைப் போல அவைகள் பால்டிக் கடலுக்குச் சென்று கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள படைகளுக்கு உபயோகமாக ஸாஸ்னிட்ஸ் துறைமுகத்தை அழித்து விடக்கூடும். டெஸ்ஸா நகரத்தை அவைகள் அழிக்கக்கூடும். நொருக்கப்பட்ட கட்டடத் தூள்கள் நிறம்பிய வெசல் தெருக்கள் வழியாக மெதுவாகச் செல்லும் எதிரியின் கவசம் பூண்ட வண்டிகளையும் முஸ்தீப்புகளையும் அவைகள் இரவு பூராவும் அழிக்கக்கூடும்.

ஜெர்மனி அதன் தற்காப்புகளை அசைந்து கொடுக்கும்படி இனிமேல் செய்ய முடியாது கிழக்குப் போர்முனையிலுள்ள சிரமங்களைத் தீர்த்துக்கொள்ளாவிடில் மேற்குப் போர் முனையில் நேசதேசப்படைகள் ஊடுருவிச் செல்லாமல் தடுக்க ரைன் நதி தற்காப்புகளில் பலமான படைகளை ஜெர்மனி குவித்துவிட முடியாது. சேனைகள் ஊடுருவிச்சென்று விட்டால் ஜெனரல் பாடன் பிரான்ஸில் சாதித்தது போல் ஜெர்மனியிலும் யுத்தப்போக்கில் மாறுதல் ஏற்படக்கூடும்.

யுத்த நிலமை நிகுதியற்றதாக இருக்கும் பொழுதும் படைகளின் சலனத்தைத் தாக்குவது லக்ஷியமாக இருக்கும் பொழுதும் டாக்டிகல், ஸ்ட்ராடஜிக் லக்ஷியங்கள் ஒன்று பட்டு விடுகின்றன. போர் முனைகளில் ஜெர்மானியர்களை முறியடிக்க சேனைகளும் டாக்டிகல் விமானப் படைகளும் ஒன்றுபடவேண்டும்.

இதற்கு வெளிப்பக்கத்தில் ஜெர்மனியில் ராணுவ சக்தியின் உள் வளையத்தை நொருக்குவது கனமான வெடி விமானங்களால் கையாளப்படுகிறது. அந்த வெடி விமானங்கள் ஜெர்மனியின் வாழ்க்கை முறையை விசேஷமாக பாதித்து வருகின்றன.

ஆஸ்திரியாவில் தேசீய கொந்தளம்.

நாஸிகள் கீழறுப்பான் வேலைக்குத் தயார் செய்கிறார்கள்.

(ஸண்டே டைம்ஸ பத்திரிகையின் விசேஷ நிருபர்).

ஸ்வதந்திரமுள்ள ஆஸ்திரியாவைத் திரும்பி அமைக்க உத்தேசிக்கிறோம் என்று நேசதசத் தலைவர்கள் உறுதி செய்தபொழுது நாஸியின் ஆக்ஷியை முறியடிப்பதில் ஆஸ்திரியர்

கள் உதவவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிருர்கள். குறிப்பிட்டகாலம் நெருங்கி வருகிற தென்று மிஸ்ட்டர் ஈடன் ஆஸ்திரியர்களுக்கு ஞர்பகப்படுத்தியிருக்கிருர்.

உண்மையில் போரில் ஈடுபடவும், நாசவேலையை மேற்கொள்ளுவதிலும் ஆஸ்திரியர்கள் தாமதம் செய்யவில்லை. அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் அற்பமானதல்ல. ஜெர்மன் போக்குவரத்துகள் தடைபடுத்தப் பட்டிருக்கின்றன. ரயில் வண்டிகளும், பாலங்களும், வெடிமருந்துசாலைகளும் தூளாக்கப்பட்டன.

ஆஸ்திரிய மாக்விப்படைகளுக்கு உதவி சுலபமாக அனுப்பப்படவில்லை. அந்தத் தேசம் பூராவிலும் ஜெர்மன் துருப்புகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. நாஸித்தலைவர்கள் கடைசியாக ஆஸ்திரியாவில் நின்று போராடுவதாக நிச்சயித்திருக்கிருர்கள் என்று ஊகிப்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நம்பத்தக்க ஆதாரங்களிலிருந்து சமீப காலத்தில் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் ஜெர்மானியர் வசமுள்ள அரங்கங்களில் ஆஸ்திரியாதான் பிளக்கமுடியாத அரண் என்று ஜெர்மானியர்கள் நினைத்து வருகிருர்கள். நீண்ட காலப் போரை நடத்துவதற்காக ஆஸ்திரியாவில் ஏராளமான சர்பராக்களும், அவசியமான தொழிற் சாலைகளும் நிச்சயமாக நம்பத்தக்க அயல்நாட்டு வேலைக்காரர்களும் இங்கு குவிக்கப்படுகி ருர்கள்.

இது உண்மையானுல், ஆஸ்திரியா பெரிய அமர்க்களமாகி வருகிறதென்றும் கீழறுப்பான் வேலை சிரம சாதயமானதென்றும் அபாயம் பொருந்தியதென்றும் பொருள்படும். ஆஸ்திரி யாவின் பெரும்பாகமும் பவேரியாவும் செகோஸ்லாவாகியாவின் பெரும்பாகமும் ஒரு தேசியக் கொத்தளமாக அமைக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தப் பிரதேசத்தின் எல்லையைஜெர்மன் படைகள் தற்காப்பு செய்யும். வாப்பன் S. S. நாஸிக்கக்ஷியைச் சேர்ந்த வர்கள் உள்நாட்டிலிருப்பார்கள். குரோட்டில் ஜனித்த ஆஸ்திரியரும் நாஸிக்கக்ஷியின் வெகுகால அங்கத்தினரும் ஹிட்லரின் பிராண ஸ்நேகிதனுமான ரெண்டுலிக் தேசிய கொத் தளத்தைக் காக்கும் படை களுக்குத் தலைமை வகிப்பார். அவன் நார்வேயிலிருந்து கிளாஷி முக்கு வந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

S. S. படைகளுடையவும் டாட் ஸ்தாபனத்தினுடையவும் தலைமை காரியா லயங்கள் ஸால்ஸ்பர்க்குக் கருகில் இருக்கின்றன. ராஜீயதலைமை காரியாலயம் பெர்கஸ்காடனிலிருக் கிறது. ரெக்கன்ஹாலும் ஜெர்மன் ரகசியப் போலீஸாரும் முனிக்கிலிருக்கின்றன. ஹிட்லர் வாலிபச் சங்கம் கோட்டைகளைக் கட்டுவதில் உதவி செய்து வருகிறது. விமான எதிர்ப்பு தற்காப்புகளும் அதிகரிக்கப்படுகின்றன. இந்த கொத்தளத்திற்குள் வியன்னு சேர்க்கப்பட வில்லை. ஆகிலும் அதுவும் பீரங்கிகள் குண்டுகளை வீசும் வட்டாரத்திற்குட்பட்டி ருக்கிறது.

டைரலெமலைகளிலிருக்கும் எதிர்ப்புப் படைகளின் சங்கியையை கடும் குளிர் ஒருவாறு அழித்து விட்டது. S. S. படைகளும், ஜெர்மன் ரகசியப் போலீஸாரும் கூடுமான வரையில் சேனையை விட்டு ஓடுகிறவர்களையும் கீழறுப்பான் வேலை செய்கிறவர்களையும் வேட்டையாடி வருகிருர்கள். ஆகிலும் கபடமாக வேலை செய்யும் பத்திரிகைகள் சுறு சுறுப்புடன் வேலை செய்து வருகின்றன. ஆகிலும் அங்குள்ள கொரில்லாப் படைகளுக்கு ஆயுதங்கள் கிடை யாது. மேலும் மற்றநாடுகளிலுள்ள கொரில்லாப் படைகளுக்கு வெளிநாடுகளிலுள்ள அவர்களின் நிர்வாகங்களிலிருந்து உதவி கிடைத்ததுபோல ராஜீய முறையில் ஒரு போதனை யும் கிடைக்கவில்லை.

ஆஸ்திரியாவில் கொரில்லாப்படைகள் ஏராளமான ஜெர்மன் படைகளை எதிர்த்துப் போராடியது மட்டுமில்லாமல் மற்றும் அயல் நாடுகளிலிருந்து வந்த 30 லக்ஷம் பேர்களையும் எதிர்த்துப்போராட வேண்டியிருந்தது. ருமேனியா, ஹங்கேரியிலிருந்து வந்த ட்யூசிப் படை களையும், வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து ஓடிப்போன ஜெர்மன் அசதி களையும் நாஸிக்கக்ஷி உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களையும் அயல்நாட்டு வேலைக்காரர் களையும் முக்கியமான எண்ணெய் பிரதேசங்களுக்கும் இரும்புச் சுறங்கங்களிலும் வேலை செய்வ தற்கு ஜெர்மனி அனுப்பியிருக்கிறது. அவர்களையும் ஆஸ்திரிய கொரில்லாப்படைகள் எதிர்த் துப் போராடவேண்டும்.

ருஷ்யாவுக்கு பிரிடன் செய்த உதவி.

(மார்டின் கோட்ஸ்).

1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதியன்று ஹிட்லர் ருஷ்யா பேரில் படை யெடுத்தபொழுது மிஸ்ட்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கத்தை ஒலிபெருக்கினுர். அது இப்பொழுது புகழ்பெற்றுவிட்டது. ருஷ்யாவுக்கும் ருஷ்யர்களுக்கும் இயன்றளவு பிரிடன் உதவி செய்வ தென்று பிரிடன் உறுதிகொண்டிருக்கிறதென்று அவர் கூறியுள்ளார்.

முதலாவதாக வடக்கு ஆபிரிக்காவிலிருந்து மத்தியக் கிழக்குக்கு ஏற்பட்ட இருவகைப் பட்ட அபாயத்தைத் தடுப்பதற்காக டொப்ருக்கிலிருந்து காஸ்பியன் கடல் வரைக்கும் உள்ள மார்க்கத்தைப் பத்திரம் செய்வதும் காகஸஸ் வழியாக ஜெர்மானியர்கள் முன்னேறக் கூடியதை எதிர் பார்ப்பதும்தான் அவர்களின் முக்கியமான வேலைகள். பாரஸிகத்தில் ஜெர்மானியர்கள் நாசவேலை செய்ய முயற்சித்தது வீணாகும்படி பாரஸீக நிர்வாகத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பிரிடனும் ருஷ்யாவும் சேர்ந்து பாரஸீகத்தை 1941-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் ஆக்கிரமித்தன. இவ்விதமாக முதன்முதலாக ருஷ்யாவுக்கும் பிரிடனுக்கும் தரை மார்க்கமாக தொடர்பு ஏற்பட்டது. ருஷ்யாவின் மாரி காலத் தாக்குதலும் வடக்கு ஆபிரிக்காவில் பிரிடனின் மாரிகாலத் தாக்குதலும் மத்தியக் கிழக்குக்கு ஏற்பட்டிருந்த அபாயத்தை நிவர்த்திக்கவில்லை. அது ஒரு வருஷத்திற்குப்பின் ஸ்டாலின்கிராடின் வீரம் பொருந்திய தற்காப்புப் போருக்குப் பின்னும், எல்அலாமீனில் பிரிடிஷ் படைகள் ஜெர்மன் படைகளை ஊடுருவிச்சென்று யுத்தப்போக்கில் மாறுதலைச் செய்த பின்னும்தான் நீங்கிற்று.

ருஷ்யப் படைகள் கிழக்கு ஜெர்மனிக்குள் முன்னேறியிருக்கும்பொழுது பிரிடிஷ் அமெரிக்கப் படைகள் ஜெர்மனியின் மேற்கு எல்லைச்சரகத்தில் முன்னேறிவரும்பொழுது, ஜெர்மானியர்கள் சூயஸ்கால்வாயையும் காஸ்பியன் கடலையும் அடைந்துவிடுவார்கள் போலிருந்தபொழுது தேசங்களுக்கு எவ்விதமான கவலை ஏற்பட்டிருந்ததென்று இப்பொழுது வர்ணிக்க முடியாது. ஆகிலும் அமைதியுடன் நேசதேசத்தார்கள் அவர்களின் யுத்த தந்திரத்தை ஒன்றுபடுத்திவிட்டார்கள்.

ஹிட்லர் சமீப காலத்தில் வீழ்ச்சி பெறப்போவதற்கு இந்த ஒன்றுபட்ட யுத்த நட வடிக்கைகள் காரணமென்பதில் ஐயமில்லை. இந்த ஒத்துழைப்புத்தான் யால்டா மகாநாட்டு முடிவுகளாக உருவாகியிருக்கிறது. ருஷ்ய வெற்றிக்கு ஒன்றுபட்ட திட்டம் மட்டும் காரணம் அல்ல, பிரிடனும் அமெரிக்காவும் அனுப்பிய சர்பராக்கள்தான் அதற்கு முக்கிய காரணமாகும். ருஷ்யா அதற்குத் தேவையான சாமான்களின் பெரும் பாகத்தைத் தானே உற்பத்தி செய்துகொண்டது என்றாலும் முக்கியமாக ருஷ்யா யூக்ரேனை இழந்தபின் பரஸ்பர உதவிதான் பேருதவி செய்திருக்கிறது.

ருஷ்யா யுத்தத்தில் புகுந்தவுடனேயே பிரிடன் ஸப்ளைகளை அனுப்பி வந்தது. அதன் பின்தான் அமெரிக்காவும் ஏராளமான தளவாடங்களை அனுப்பத்தொடங்கிற்று. 1944-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முடிய 6,000 விமானங்களும், 4,000-க்கு மேற்பட்ட டாங்கிகளும், 1,38,000 டன்கள் மொத்த எடையுள்ள உணவுப் பொருள்களும், அலுமினியம், ரப்பர், தகரம், சணல், முதலிய தாதுப்பொருள்களும் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

பிரிடன் அனுப்பிய தொழிற்சாலை யந்திரங்கள், முக்கியமாக மின்சார உற்பத்தி யந்திரங் கள் ருஷ்யாவுக்கு அதிக உபயோகமுள்ளவை. பிரிடிஷ் இஞ்ஜினியர்கள் அமைத்த அசைந்து செல்லும் மின்சார உற்பத்தி யந்திரங்கள் ரயில் வண்டிகளில் அமைக்கப்பட்டு போர் முனைக்குப் பின்னுள்ள நகரங்களிலும் தொழிற்சாலைகளிலும் மின்சார ஸப்ளை செய்ய உபயோகிக்கப்பட்டன. அந்த இடங்களிலுள்ள மின்சார உற்பத்தி நிலயங்களை ஜெர்மானியர் கள் அழித்திருந்தார்கள்.

1944-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முடிய பிரிடனிலிருந்து 1,150,000 டன்கள் மொத்த எடையுள்ள சாமான்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் 1,09,000 டன்கள் தான் நஷ்ட மாகிவிட்டன.

அந்த சமயத்தில் மர்மான்ஸ்குக்குச் செல்லும் கடல் மார்க்கமும் பாரஸீக மார்க்கமும் தான் நமக்கு சௌகரியமாக இருந்தன. பாரஸீகத்தில் பந்தார் ஷாபூர், கோராம்ஷார் என்ற துறைமுகங்களையும் இருப்புப்பாதையையும் நாம் விஸ்தாரப்படுத்தவேண்டியதுடன் கரடுமுரடான பிரதேசத்தில் புதிய ரஸ்தாக்களையும் அமைக்கவேண்டியிருந்தது. இந்தப் போக்குவரத்து மார்க்கத்தை 1943-ம் வருஷத்தில் அமெரிக்கர்கள் அபிவிருத்தி செய்தார்கள். அதன் வழியாக தினசரி 8,000 டன்கள் சாமான்கள் செல்லுகின்றன. ரஸ்தா போக்கு வரத்துக்கும் பாரஸீகத்திலிருந்து ருஷ்யா வரையில் செல்லும் விமானங்களுக்கும் தேவையான பெட்ரோல் அபாடனிலுள்ள பிரிடிஷ் எண்ணெய் சுத்தி செய்யும் ஆலையிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் குழாய்கள் மூலம் ஸப்ளை செய்யப்படுகிறது.

இரண்டாவதும் குறுகலானதுமான மார்க்கம் ஆர்க்டிக் கடல் மார்க்கம்தான். இங்குள்ள பிரிடிஷ் யுத்தக் கப்பல்களும் சாமான் கப்பல்களும் வெற்றிகரமான அநேக போர்களை நடத்தியிருக்கின்றன.

அந்தக் கப்பல் படைகள் ருஷ்யாவுக்கு, புயல், உறைபனி, மூடுபனி, முதலியவற்றைத் தாண்டியும் நார்வேயிலுள்ள தளங்களிலிருந்து புறப்படும் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்,

நாசகாரிகள், பூ படகுகள், வெடி விமானங்களை முதலியவற்றையும் தாண்டிச்சென்றன. இந்தச் சாமான் கப்பல் கூட்டத்தை உத்தேசிக்கும் இடத்திற்கு பத்திரமாகக்கொண்டு போவதற்கு அநேக ஆட்களையும் கப்பல்களையும் பலி கொடுக்கவேண்டியிருந்தது. இவ்விதமாக ருஷ்ய வெற்றிக்குப் பேருதவி செய்வதில் பிரிடிஷ் கடற்படையும் ஒரு பங்கெடுத்துக் கொண்டதென்றும் அது பெருமை பாராட்டக்கூடும்.

நாசம் விளைவிப்பதைவிட உயிர்களைக் காப்பாற்றுவது.

நவீன யுத்தத்தில் விமானப்படையின் சேவை.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.)

ஜெனரல் ஈசன்ஹவர் அவர் கமாண்டுக்குட்பட்ட நேசதேசப்படைகளின் சார்பாக பிரிடிஷ் பாம்பர் கமாண்டுக்கு அனுப்பிய வந்தனோபசாரமும் அதற்கு விமானப்படை சீப் மார்ஷல் ஹாரிஸ் பதிலனுப்பியதும் வியாக்யானம் செய்ய உரித்தானவை. ஜெனரல் ஈசன்ஹவர் நேசதேச வெடிகுண்டு வீச்சு ஜெர்மன் பொருளாதாரத்தை நன்கு பாதித்தது என்று சொன்னது யதார்த்தம்தான். ஏனெனில் ஜெர்மனியில் ஸோல்ஜர்கள் முன்னேறும்பொழுது அதன் பயனைக்காண்கிறார்கள். ஆகிலும் விமானப்படை சீப் மார்ஷல் அனுப்பிய பதிலில் நவீன யுத்த ஆராய்ச்சி செய்பவர்களும் அறியக்கூடாத ஒரு உண்மை காணப்படுகிறது.

அந்த பதிலில் நான் வற்புறுத்தக்கூடிய ஒரு வாக்கியம் பின்வருமாறு. "முன்னேறும் சேனைகள் சென்ற யுத்தத்திலேற்பட்ட நீண்டகாலத் துன்பங்களும் பயங்கரமான ஆள்சேதமும் குறைவுபடுவதற்கு இந்த விமானத் தாக்குதலால் ஏற்பட்ட நாசம்தான் காரணம் என்று சேனைகள் மதித்துவிட்டன என்று நாங்கள் அறிவதுதான் எங்களுக்குச் சிறந்த வெகுமானம்."

இந்த வாக்கியத்தில் விமானப்படை சக்தி நாசம் விளைவிப்பதைவிட உயிர்களைத்தான் பெரும்பாலும் காப்பாற்றுகிறதென்று ஏற்படுகிறது. வடக்கு ஆபிரிக்காவில் விமானப்படை ஸோல்ஜர்களுக்கு முதல் முதலான வெற்றிக்கு உதவியளித்தது முதல் சம்பவங்களை பரிசுத்தமான அபிப்பிராயத்துடன் கவனித்துவந்த எல்லோருக்கும் இந்த அபிப்பிராயம் தெளிவுபட்டிருக்கும்.

விமானப்படை போர்முனையிலும் போர்முனைக்குப் பின்னும் ஆகாய ஆதிக்கம் பெற்றாலொழிய சேனையும் கடற்படையும் அபாரமான நஷ்டமன்னியில் போரை நடத்த முடியாது. சென்ற யுத்தத்தில் சோம் நதியில் நடைபெற்ற போரையும் வட ஆபிரிக்காவில் பீல்ட்மார்ஷல் மாண்ட் காமரி நடத்திய போரையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நம்மை திடுக்கிடச்செய்யும். சோம் நதிப்போர் அநேக வாரங்கள் நடைபெற்றது. 5 லக்ஷம் ஆட்கள் சேதமேற்பட்டது. சில கஜங்கள் தூரம் படைகள் முன்னேறின. எல் அலாமினிலிருந்து கெப்பான் வரையில் நடைபெற்ற நடவடிக்கையில் 8-வது சேனைக்கு 40,000 பேர்கள் நஷ்டம். ஆனால் 1,500 மைல்கள் லாபம் கிடைத்தது.

விமான நடவடிக்கையின் உடன் காலத்திய பயன்கள் எல்லோரும் அறியக்கூடியவை அழிக்கும் சக்தியென்று விமானப்படையைப்பற்றி முதலெடுப்பில் அபிப்பிராயப்படுவது சகஜம்தான். ஸோல்ஜர்களில் உயிர்களைக் காப்பாற்றுவதென்று உடன்காலத்தில் விளக்கவில்லை. விமானப்படை உயிரைக்காப்பாற்றக்கூடியதென்ற எண்ணம் ஏற்படாமல் போய்விடுகிறது.

விமான சக்தி எதிரியை அழிப்பதுடன், நம்முடைய படைகளுக்கும் பேருதவி செய்து வருவதினால்தான் ஸோல்ஜர்களின் உயிர்களைக் காப்பாற்றி வருகிறது.

இப்பொழுது பர்மா போரை கவனிப்போம். கோகிமாவிலிருந்து மெயிக்டிலாவுக்கு 400 மைல்கள் தூரமிருக்கிறது. அது காடுகள் அடங்கிய மலைகளும் பள்ளத்தாக்குகளும் உள்ளது. நவீனக்கவசம் பூண்ட படைகளுடன் நடத்தக்கூடிய போருக்குத்தேவையானபடி முஸ்தீப்புகளுள்ள எந்தசேனையும் தரைமார்க்கமான போக்குவரத்துகளை நம்பியிருந்தால் அந்த 400 மைல்களையும் கடந்து சென்றிருக்க முடியாது. பாதிதூரம் செல்லுமுன்னரே பருவகாலம் பிரயாணத்திற்கு முற்றுப்புள்ளி போட்டிருக்கும். காடுகளிலும் பாலைவனங்களிலும் இதற்குமுன் போரைநடத்தியதில் உள்ள மகத்தான சிரமங்கள் தளத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள படைகளுக்கு சர்பராக்களைக் கொண்டு போக முடியாத அசக்திதான் போர் முனையில் விமானப்படை ஆதிக்கம் பெறாத வரையில் வட ஆபிரிக்காவில் இரண்டு தடவை அந்த சிரமம் ஏற்பட்டது. இப்பொழுது பர்மாவிலுள்ள பிரிடிஷ், அமெரிக்க விமானப்படை காடுகளின் வழியாக இல்லாமல் காடுகளுக்கு மேல் சர்பராக்களைக் கொண்டு

போய்வருகிறது. வின்கேட்தான் இதற்கு அடி கோலினர். வட பர்மாவை மீட்க துரிதமாக முன்னேறி வரும் சாம்ராஜ்ய சேனைகளின் போஷணைக்கு முக்கியமான சாதாரண மூலாதார மாக விமானப்படை இருந்துவருகிறது. ஆகாய ஆதிக்கம் போர் முனையில் அநேக பேர்களைக் காப்பாற்றியிருக்கிறது. சிறிய படைகள் கூடச்செல்லக்கூடாத இடங்களில் ஏராளமான படைகள் சென்று போர்புரிய சாதகம் அளித்திருக்கின்றன. யுத்தப்போக்கை துரிதப்படுத் துவதின் மூலம் இதற்கு முன் போர்களில் போக்குவரத்துக்களைத் தடைசெய்து யுத்த நோய் வாய்ப்பட்டவர்கள், காயம்பட்டவர்கள் முதலியவர்களின் சங்கியை குறைந்து விட்டது. விமானப்படையின் மீதப்படுத்தும் சக்தி கடலில் மிகவும் நன்கு புலப்படுகிறது. பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் என்ற கப்பல் நஷ்டங்களை நாம் ஞாபகசக்திக் கொண்டால் போதும்.

பிரென்னர் கணவாயில் விமானப்படை முற்றுகை.

கெஸ்ஸல்ரிங் சர்ப்பராக்களை இழந்தான்.

(விங் காமாண்டர் L. V. பிரேசர்).

ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியில் இதாலியிலும் நார்வேயிலும் அடை பட்டிருக்கும் அநேக ஜெர்மன் டிவிஷன்களை ஜெர்மனியை ரக்ஷிக்க அவன் உபயோகப் படுத்தக்கூடும். ஆனல் பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் ஆஸ்லோ வளைகுடாவிற்கும் டென்மார்க்குக்கும் மத்தியில் ஸகராக்கின் குறுக்கே திருட்டுத்தனமாகச் செல்லும் கப்பல்கள் பேரில் பாய்ந்து துருப்புகளின் போக்குவரத்துக்குத் தடை செய்கின்றன. வடக்கு இதாலியிலுள்ள கெஸ்ஸல்ரிங் நேசதேசத்தாரின் இடைவிடாத எதிர்ப்பை சமாளித்து வருகிருன்.

ஜெர்மனியில் மகத்தான தரைப்போர்கள் நடைபெறுகிறதும், வெடிகுண்டு வீச்சினுல் லக்ஷியங்கள் ஒன்றன்பின் ஒன்ருக நொருங்குவதும் வடக்கு இதாலியிலுள்ள சம்பவங்களை பாதிக்கக்கூடும். ஆகிலும் இவையெல்லாம் ஜெர்மனியுடன் நடைபெறும் போரின் ஒரு அம்சம்தான். இங்கும் மற்றல்லா பிரதேசங்களிலும் நேசதேச விமானப்படைகள் முக்யமான பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. கெஸ்ஸல்ரிங்க் பின்வருமாறு சொன்னன். "இந்தப் போர்களில் நாம் இதாலியை ரக்ஷிக்கவில்லை. ஜெர்மனிக்காகத்தான் போர் புரிகிருேம். போரன்னில் ஒரு அங்குல பிரதேசத்தையும் கைவிடக்கூடாது."

ஜெர்மனி வடக்கு இதாலியிலிருந்து படைகளை வாபஸ் செய்ய முயற்சி செய்வதாக சமீபகாலத்தில் தோன்றிற்று. ஆனல் படைகளுக்கு முஸ்தீப்புகளை வழங்க கெஸ்ஸல்ரிங் இப்பொழுது முயன்று வருகிருன் என்று தெரியவருகிறது. உபரிப்படைகளை அங்கு கொண்டுவருவதற்கும் யோசனை திருப்திகரமாகயிருக்காது. ஸப்ளைகளைக்கொண்டு வருவதற் கும் அதிக சௌகரியம் கிடையாது. ஏனெனில் பிரிடிஷ், அமெரிக்க, ஸ்ட்ராடஜிக், டாக்டிகல் விமானங்கள் பிரென்னர் கணவாயிலுள்ள முக்கியமான இருப்புப்பாதையை நொருக்கி வருகின்றன.

வடகிழக்கில் சுற்றலான வழியிருந்த போதிலும் கெஸ்ஸல்ரிங்குக்கு பிரென்னர் மார்க்கம் தான் ஜீவனுடி போன்றது. இருப்புப்பாதைகள் துணிக்கப்படுகின்றன. ரயில் வண்டிகள் நொருக்கப்படுகின்றன. ரெயில்வே ஸ்டேஷன்களும் வண்டிகள் நிற்குமிடங்களும் அழிக்கப் படுகின்றன.

விமானப்படைகள் வடக்கு இதாலியிலிருந்து தெற்கு ஜெர்மனியை கூடுமான வரையில் துணித்து வருகின்றன. இதைத் தவிர இதாலிய தளங்களிலுள்ள விமானங்கள் லக்ஷியங் களைத் தாக்கி ஆஸ்திரியாவிலும் மற்ற இடங்களிலுமுள்ள ருஷ்யப்படைகளுக்கு நேர்முகமாக ஒத்தாசை அளித்து வருகின்றன.

உபயோகமுள்ள வரையில் கெஸ்ஸல்ரிங் சமாளித்து நிற்கவேண்டுமானல் அவன் பிரென்னர் கணவாய் வழியாக சர்பராக்களைப் பெரும் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். பிரான்ஸ் விடுதலை பெற்றபின் இதாலிக்கு மேற்கிலிருந்துவரும் மார்க்கத்தை அவன் இழந்தான். சென்ற எட்டு மாதங்களாக நேசதேச விமானப்படை பிரென்னர் மார்க்கத் திலுள்ள 100 மைல்களை முற்றுகை செய்து வருகின்றது.

பிரென்னர் மார்க்கம் போநதிப் பள்ளத்தாக்கை அடையும்பொழுது அந்த பிரதேசத்தி லுள்ள அநேக நதிகளை அநேக பாலங்கள் மூலம் தாண்டவேண்டும். விமானப்படைகள் ரஸ்தா, இருப்புப்பாதை பாலங்களை பலமாகத் தாக்கி வந்திருக்கிறது. ஆகிலும் காலநிலை அசௌகரியத்தினல் இந்தத்தாக்குதல் பரிஷ்காரமாக நடைபெற முடியவில்லை. ஆனல்

நடவடிக்கை ஒய்ந்துவிடவில்லை யென்பது ஜனவரி மாதத்திய புள்ளி விபரங்களைக் கவனித்தால் தெரியவரும். இந்த மாதத்தில் கால நிலை மிகவும் அசௌகரியமாக இருந்தது. ஆகிலும் இந்த மாதத்தில் மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் விமானப்படை, சாம்ராஜ்ய விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் 16,900 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன. அவற்றில் 11,800-க்கு மேற்பட்ட டன்கள் இருப்புப்பாதைகள் ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள், ரஸ்தாக்கள் துறைமுகங்கள் பேரில் போடப்பட்டன. காலநிலையில் தெளிவு ஏற்பட்டபொழுது குண்டு வீச்சு அதிகரித்தது. இந்தக் குறுகலான பிரதேசத்திலுள்ள போக்குவரத்து மார்க்கங்கள் இடைவிடாது தாக்கப்பட்டதினால் கெஸ்ஸல்ரிங்கிடமுள்ள படைகள் கையிருப்பிலுள்ள பொருள்களைத்தான் நம்பியிருக்க வேண்டி நேரிட்டது. டாக்டிகல் விமானப்படைகள் துணிக்கப்பட்ட இருப்புப்பாதைகளுக்கு பின்புறமுள்ள சாமான் குவியல்களையும் தாக்கிவந்தன.

மற்றெல்லா இடங்களிலிருப்பதுபோல இதாலியிலுள்ள ஜெர்மன் இருப்புப்பாதை ரிபேர் தொழிற்சாலையும் துரிதமாகவும் திறமையுடனும் வேலை செய்துவருகிறது. ஆகிலும் அவைகளுக்கு அதிக சிரமங்கள் ஏற்பட்டிருக்கும். சில சமயங்களில் வெனிஷியா சமவெளிகளில் சென்ற மூன்று இருப்புப்பாதைகளும், நான்கு இடங்களில் தடங்கல் செய்யப்பட்டன. 70 மைல்களுக்குள் 50 பாலங்கள் உடைக்கப்பட்டுவிட்டன.

சென்ற சில மாதங்களில் வடக்கு இதாலி பூராவிலுமுள்ள பாலங்களும், இருப்புப்பாதை நிலயங்களும், எஞ்சின்களும் அழிக்கப்பட்டபோதிலும் பிரென்னர் கணவாயும் முக்கியமாக அழிக்கப்பட்டிருக்கிறது. தினசரி நடைபெறும் தாக்குதல்களை விமான எதிர்ப்பு பீரங்கிகள் தடுக்க முடியவில்லை. ஆள் சேதம் அதிகரித்ததினால் கவசம் பூண்ட வாஹனங்களும் எஞ்சின்களும் தேவை யென்று சொல்லப்பட்டு அதைச் செய்தவர்களைப் போர்முனைக்கு அனுப்பும்படி ஜெர்மானியர்கள் பதிலனுப்பினர்கள்.

பிரென்னர் கணவாயில் ஒரு நாள் நடைபெற்ற தாக்குதலைப் பற்றிச் சொல்லுவோம். நடுத்தரமான வெடி விமானங்கள் ஜெர்மனிக்கு மேற்கிலிருந்து செல்லும் வழிகளை அழித்தது போல் இருப்புப்பாதைகளைத்தகர்த்தன. ஒஸனி கோபர்ஸ், ஸெமிண்ட், ஆஸ்டி செரேயினே என்ற இரண்டு தங்குமிடங்களில் மார்க்கம் குறுகலாக இருக்கிறது. இங்கு மண்மூட்டுகளைத் தள்ளிவிட்டு வழியை அடைத்துவிட்டதினாலும் அதிக இடவசதி இல்லாததினாலும் தாத்காலிகமாக ஒரு பாதையை அமைப்பது முடியாமல் போய்விட்டது.

இக்கட்டுரை எழுதும் சமயத்தில் பிரென்னர் கணவாய் இன்னும் நன்றாக அடைபடவில்லை. ஆனால் போக்குவரத்து நேராடிச் செல்லமுடியவில்லை. எதிரி ஒவ்வொரு தாக்குதலுக்குப்பின்னும் வெகு சீக்கிரமாக வழியைச் சுத்திசெய்து விடுகிறான். ஆனால் பழுது பார்ப்பதைவிட அதிகமான நஷ்டம் ஏற்படுகிறது. கெஸ்ஸல்ரிங்கின் படைகளுக்கு அபாயம் அதிகரித்து வருகிறது.

பிரென்னர் கணவாயிலுள்ள இரண்டு இருப்புப்பாதை உள்ள மார்க்கத்தில் 40 வண்டிகள் இங்குமங்கும் நடமாடிக்கொண்டிருக்கின்றன. மின்சார டிரான்ஸ் பாமர் ஸ்டேஷன்களை நொருக்கியும் எதிரிகள் நீராவியை உபயோகிக்கும்படி செய்தும் பாலங்களையும் ரஸ்தாக்களையும் உடைத்தும், எதிரியின் போக்குவரத்துகள் வெகுவாகக் குறைந்துவிட்டன.

கணவாயைத் தற்காப்பு செய்ய கனமானதும் லேசானதுமான விமான எதிர்ப்பு பீரங்கிகளை எதிரி குவித்து வைத்திருந்த போதிலும் நேசதேசத்தாருக்குக் குறைவான நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கிறது. எதிரியும் தந்திரத்தைக் கையாண்டு வருகிறான். ஒளிப் படங்களிலிருந்து ஒரு பாலத்தின் ஒரு கண் துணிக்கப்பட்டதென்றும் அது பழுது பார்க்கப்படவில்லை யென்றும் தெரியவந்த பொழுதும்கூட எதிரிகள் ஸப்ளைகளைக் கொண்டுபோயிருந்தார்கள். இதை உற்றுநோக்கிய பொழுது இரவில் முன்னதாகத்தயாரிக்கப்பட்ட இருப்புப் பாதை அமைக்கப்பட்டு அதன் வழியாக சர்ப்பராக்கள் சென்றதென்றும் அது பகலில் அப்புறப்படுத்தப்பட்டதென்றும் தெரிய வந்தது.

வடக்கு இதாலியில் போக்கு வரத்துக்கான போர் நடைபெற்று வருகிறது. இது நடைபெறும் வரையில் அவனுக்கு இருநடவடிக்கைகள்தான் சாத்யமானவை. இதாலியில் நிலைத்து நின்று ஸப்ளைகளும் வெடி மருந்துகளும் குறைவுபடுவதினால் அவன் நிரந்தரமாக முடமாக்கப்படுவான். அல்லது படைகளை பின்வாங்கி சாவுப் பொறிக்குள் மாட்டிக்கொள்ளும்படி செய்ய வேண்டும். மூன்றாவது வழி கிடையாது. கிழக்குப்பக்கத்திய மார்க்கங்கள் வழியாக இதாலியைக் காலி செய்வது என்பதும் இயலாத காரியம்.

போரில் புதிய கட்டத்திற்குத் தயார்.

எஞ்சினியரின் படைகளின் நடத்தை.

(மாஞ்செஸ்டர் கார்டியனின் ராணுவ நிருபர்.)

ரெமேஜன் பாலத்தைப் பிடித்த பின்னும் ரைன் நதியை அடைந்த நேசதேச முன்னேற்றம் தங்குதடையன்னியில் பெர்லினுக்குச் செல்லுமென்று எண்ணமுடியாது. ரைன் நதியைத்தாண்ட ஒரு பாலம் உருப்படியாகயிருக்கிறது. இதைக்கொண்டு ரைன் நதியின் கிழக்குக்கரையில் ஒரு முன்னேறும் வாசலை ஏற்படுத்த சாதகமேற்பட்டது. ஆகிலும் ஜெர்மனியுடன் இறுதிப்போரை நடத்த ஏராளமான மனிதர்களையும், வாஹனங்களையும், முஸ்தீப்புகளையும் கொண்டுபோக இன்னும் அநேக பாலங்கள் வேண்டும்.

இந்தப் பாலங்களை சேனையைச் சேர்ந்த எஞ்சினியர்கள் கட்டவேண்டும். ரைன்போரில் ஒரு நதியின் குறுக்கே பாலத்தைக் கட்ட ஏராளமான தளவாடங்கள் வேண்டியிருக்கும். 60 அடி நீளமுள்ள தூண்கள் நதியின் பரப்புக்குள் இறக்கப்படவேண்டும். அவைகளை இறக்கினால்தான் பாலங்களை அமைக்கமுடியும். அவ்விதமான பிரம்மாண்டமான மரங்களைக் கொண்டுபோய் சரியானபடி அமைப்பதென்பது சில மணி நேரங்களில் சாதிக்கக்கூடியதில்லை.

21-வது சேனைப்பகுதியில் பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரியைச் சேர்ந்த மராமத்து வேலை டிரக்டரான மேஜர் ஜெனரல் E. G. டிக்கல் போருக்கும், போருக்குப்பின்னும் எஞ்சினியர்கள் செய்யும் மகத்தான சேவையை விவரித்துச் சொன்னார். மாஸ் அல்லது ரைன் போன்ற நதியில் பாலத்தை அமைப்பது மிகவும் பிரமாதமான காரியம். ஆனால் பாலம் கட்டுவதென்பது எஞ்சினியர்களுக்கு ஏற்பட்ட வேலையில் ஒரு சிறிதுதான்.

பாலத்துக்குச் செல்லும் வழிகளை அமைப்பது, சேனைகளின் போக்குவரத்தைத் தாங்கக்கூடிய வகையில் ரஸ்தாக்களை கெட்டிப்படுத்துவது, ஆரம்பத்தில் நதியைத் தாண்டுவதற்காக சிறிய படகுகளை ஒன்று சேர்ப்பது, நூற்றுக்கணக்கான சிறிய எஞ்சின்களைக் கட்டுவது இதுபோன்ற வேலைகள் ஒரு பெரிய நதியைத்தாண்டுவதில் அத்யாவசியமான முற்போக்குகளாக உள்ள அலுவல்களின் சில காரியங்கள் தான்.

பாலத்தைக் கட்டுவதற்கான தளவாடங்களுக்கு முகான்மையை அளித்தாலும் இது நிரந்தரமாக இருக்கமுடியாது. போர்முனையிலுள்ள சேனைகளுக்குரிய தளவாடங்களும் அவசியமாகக் கொண்டுபோகப்படவேண்டும். சேனைக்கு ஏராளமாக மரம் வேண்டும். நேசதேசப்படைகளுக்கு அனுப்பப்படும் சர்பராக்கள் பிரெஞ்சு-பெல்ஜிய நிலக்கரியின் உற்பத்திக்கும் மரம் தேவைப்படும்.

ஜெனரல் டிக்கல் 21-வது சேனைப்பகுதியில் அவர் செய்த வேலையைப்பற்றித்தான் முக்கியமாக எடுத்துரைத்தார். சேனைக்கும் பெல்ஜியச் சுரங்கங்களுக்கும் மரம் சப்ளை செய்வது தான் முக்கியமான வேலையென்று நாங்கள் கருதினோம். ஆர்டெனிஸில் ரூண்ட்ஸ்டெட் தாக்கினதினால் அங்கிருந்து மரத்தை அனுப்புவது முக்கியமான பிரச்னையாகிவிட்டது. அந்த எதிர்ப்பு இந்த யுத்த சரித்திரத்தில் முடிந்து விட்டதென்றாலும் காட்டிலுள்ள சுரங்க வெடிகளால் தொந்திவு ஏற்பட்டதினால் அவைகளைச் சுத்தி செய்ய வேண்டியதாகிவிட்டது.

ரஸ்தாக்களை கெட்டிப்படுத்துவதற்கும் விமானதளங்களை அமைப்பதற்கும் பாலங்களுக்குப் போகும் வழிகளை கெட்டிப்படுத்துவதற்கும் காலம் மிகுதியாகவேண்டும். இதனாலும் போக்குவரத்துக்கு அதிக சிரமங்கள் ஏற்படும்.

நார்மண்டியில் படைகள் இறங்கியபின் எஞ்சினியர்கள் செய்த வேலைகளுக்கு எவ்வளவு தளவாடங்கள் உபயோகப்படுத்தப்பட்டனவென்ற புள்ளி விபரங்களை வெளியிடக்கூடும் பொழுது அவைகள் அகில பிரிடனிலுள்ள பெரிய நகரபரிபாலன சபைகள சமாதான காலத்தில் அநேக வருஷங்களாகச் செய்யக்கூடிய அளவுக்கு சமமானவை என்று தெரிய வரும்.

யுத்தக்கைதிகள் முகாமுக்கு அத்யாவசியமான தேவைகளை அமைப்பதே நகர பரிபாலன சபையின் வேலை அளவுக்கு சமமாக இருக்கும். 20,000 பொதுமக்களுக்குத் தேவைப்படும் தண்ணீரும் பரிசுத்தமும் 20,000 கைதிகளுக்கும் தேவைப்படும். ரைன் நதி பிரதேசத்தில் நேசதேசப் படைகள் தாக்க ஆரம்பித்தது முதல் அநேக 20,000-ம் கைதிகளுக்கு எஞ்சினியர்கள் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

போரின் புதிய கட்டத்துக்குத்தயார் செய்வதற்கான ஏராளமான தளவாடங்களைக் கொண்டு போவதற்குத் தேவையான சிரமங்களுடன், நவீன யுத்தத்தில் சாமான்களைக் குவித்து வைப்பதென்பதும் மிகவும் முக்கியமான வேலைதான். நவீன ராணுவ எஞ்சினியரிங் அபிவிருத்தி மூலம் பாலம் கட்டுவது,போன்ற அநேக வேலைகளில் சிறந்த நூதன. மான முறைகள் காணப்படுகின்றன. முன் கூடியே தயாரிக்கப்பட்ட பாலங்களை அமைப்ப தென்பது சரியான பாகங்களைக் கட்டுவதுடன் அவைளை ஒழுங்கான முறைப்படிக்கும் அமைக்க வேண்டிய அம்சமுள்ளது. ஒரு சிருகாணி கட்டுக்கெட்டுப்போய் விட்டாலும் அல்லது தவறான பாகம் அவசர சமயத்தில் உபயோகப்படுத்தப்பட்டாலும் அநேக நாட்களாக செய்த அபாயம் பொருந்திய வேலை கெட்டுப்போய்விடும். ஆகையால் சேனையிலுள்ள ஸ்டோர் கீப்பர்கள மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களா இருக்கவேண்டும்.

டச்சு, பெல்ஜியம், பிரெஞ்சு மக்கள் நேசதேச எஞ்சினியரிங் படைகளுக்குப் பேருதவி செய்து வருகிறார்கள் என்று ஜெனரல் டிக்கல் சொல்லுகிறார். தொழிற்சாலைகளிலும், பழுது பார்க்கும் சாலைகளிலும் அவர்கள் செய்யும் வேலைதான் போர்முனையிலுள்ள நேசதேச ஸோல்ஜர்களின் பரிபாலனத்துக்கு முக்கியமாக உதவி செய்து வருகிறதென்றும் அவர் சொன்னார்-

---

ஐந்து வருஷங்களாக யுத்தகால உணவுப்பொருள்.

உள்நாட்டு விளைவுபொருள்களும் இறக்குமதிக் குறைவும்.

(லெட்டிஸ் கூபர்.)

பிரிடனின் யுத்த முயற்சியைப்பற்றி வெளியிடப்பட்ட அறிக்கையில் ஐந்து வருஷங்களாக பிரிடிஷ் பொதுமக்கள் உட்கொள்ளும் ஆகாரத்தைப்பற்றிய சரித்திரம் ஐந்து பாரக்களிலும் இரண்டு அட்டவணைகள் மூலமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலிருந்து இரண்டு விஷயங்கள் வெளிப்படுகின்றன. முதலாவதாக, பிரிடிஷ் மக்கள் முக்கியமான உணவுப் பொருள்களை, விசேஷமாக கசாய், மீன், கனிவர்க்கங்களை மிதமாகச் சாப்பிடவேண்டியிருந்தது. அவைகளைச் சரிக்கட்ட உருளைக்கிழங்கையும், காய்கறிகளையும் உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. இரண்டாவதாக தேசத்தில் அகப்பட்ட உணவுப்பொருள்கள் எல்லோருக்கும் நியாயமாகப் பங்கிடு செய்யப்பட்டுவந்தது. ஜனங்கள் தேகத்தைப் புஷ்டியாக வைத்துக் கொள்ளுவதற்குறிய போதுமான உணவை ஒவ்வொருவருக்கும் வழங்குவதுதான் யுத்த காலத்திய கொள்கை. இதை உள்நாட்டு உற்பத்தியைக்கொண்டும், இறக்குமதியைக் குறைத்துக்கொண்டும் சாதிக்கவேண்டும.

ஜனங்கள் பசியை நீக்கத் தேவையான ஆகாரத்தை மட்டுமில்லாமல், அவர்களின் தேக புஷ்டிக்கும், நிலைமை குறையாமலிருப்பதற்கும், நோய்வாய்ப் படாமலிருப்பதற்கும் என்ன பொருள்கள் தேவையென்று விஞ்ஞான சாஸ்திர முறையில் மதிப்பிடப்பட்டதை ஆகாரமாகக் கொண்டுதான் பிரிடனின் உணவுப்பிரச்னை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்காக அந்தந்த வகுப்புக்குத் தக்கவாறு, தாய்களுக்கும், குழந்தைகளுக்கும் அதிகமான பால், பள்ளிக்கூடத்திலுள்ள குழந்தைகளுக்கு தேகபுஷ்டிக்குரிய உபரி உணவு முதலியவைகள் போதுமான அளவிற்கு விநியோகம் செய்யத் திட்டம் போடப்பட்டது. அடுத்தபடியாக இந்த உணவுப் பொருள்களை எவ்விதம் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடுமென்று ஆலோசிக்கப் பட்டது,

பிரிடிஷ் உணவுப்பொருள் இலாகாவில் சேவையைப் பூராவாக அறியவேண்டுமானால் அறிக்கையில் மற்றொரு பகுதியிலுள்ள விவசாய இலாகாவின் வேலையைப்பற்றிய ரிபோர்ட்டையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். அதைக் கவனித்தால் பிரிடனின் உணவுப்பொருள் காலரிகள், புடோடின்கள் சம்பந்தப்பட்ட மட்டில் 70 சதவீதம் அதிகரித்திருக்கிறதென்று தெரியவருகிறது. இதனால் தான் உணவுப்பொருள் இறக்குமதியை 50 சதவிகிதம் குறைக்க சாத்தியமாயிற்று. இதன் மூலம் 10 மிலியன் டன்கள் மொத்த எடையுள்ள கப்பல்கள் மீதப்படுத்தப்பட்டன. 1943-ம் வருஷத்தில் கோதுமை, உருளைக்கிழங்கு அறுவடை யுத்தத்துக்கு முன் வருடங்களைவிட இரண்டு மடங்காக இருந்தது.

பால் செலவும் இதைப்போன்றதுதான். பாலே திருவமாக உட்கொண்ட முறை அதிகரித்தது. ஆனுல் நோய்வாய்ப்பட்ட சிலருக்குத்தான் பால் சப்ளை செய்யப்பட்டு வந்ததால் 18 வயதுக்கு மேற்பட்ட மற்றவர்களுக்கு யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட பால் குறைவாகத்தான் ஸப்ளை செய்யப்பட்டது. யுத்தத்துக்குமுன் ஒரு வாரத்திற்கு 3·25 பைண்ட்கள் செலவென்ருல் 1943-ல் அது 4·32 ஆக அதிகரித்தது. ஆகிலும் மற்றெந்த உணவுப்பொருள்களையும்விட பால் சரியானபடி பங்கிடு செய்யப்பட்டது.

1940-ம் வருஷத்தில் நிறுவப்பட்ட தேசீய பால் ஸப்ளை திட்டப்படி கர்ப்ப ஸ்திரீகளுக்கும் ஐந்து வயதுக்குக் குறைவான ஒவ்வொரு குழந்தைக்கும் தினசரி ஒரு பைண்ட் பால் ஸப்ளை செய்யப்படவேண்டும். சொல்ப விலேக்கோ அல்லது வாங்கும் சக்திகுறைவாக உள்ளவர்களுக்கு இனமாகவோ அது கொடுக்கப்படும். அடுத்தபடியாக 5 வயது முதல் 17 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு தினசரி 1½ பைண்ட் பால் ஸப்ளை செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு முதன்மையாக பால் ஸப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் விளைவுயாதெனில், கர்ப்ப ஸ்திரீகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும் அதிக பால் கிடைத்துவந்தபொழுது வயது முதிர்ந்தவர்க்கு பால் ஸப்ளை குறைந்துவிட்டது. மாரிகாலத்தில் அவனுக்கு வாரத்திற்கு இரண்டு பைண்டுக்கு மேல் பால் கிடைப்பதில்லை. தொழிலாளரும் அவன் மனைவியும் காலை போஜனத்துக்கும் மத்தியான சிற்றுண்டிக்கும் தேநீருக்கும் கோகோவுக்கும் பாலில்லாமல் அநேகம் தடவை சிரமப்பட்டிருக்கிருர்கள்,

சாதாரணமான பிரிடிஷ் மக்கள் யுத்தத்துக்கு முன்னிருந்த வருஷங்களைவிட இப்பொழுது தாழ்வான ஆகாரத்தைக்கொண்டு ஜீவனம் செய்துவருகிருர்கள். ஆனுல் ஏழை மக்களின் உணவுப்பொருள்களின் தரம் அபிவிருத்தியடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் ஏழ்மைத்தனம் குறைந்திருக்கிறது. மேலும் யுத்தத்துக்குமுன் சம்பாதித்த பொருளை சிற்றுண்டி சாலைகளிலும் போக்கியங்களிலும் செலவிட்ட ஜனங்கள் இப்பொழுது பங்கீட்டு முறைப்படி ஆகாரம் உட்கொண்டு வருகிருர்கள்.

பிரிடனுக்கு புதிதான கனிவர்க்கங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. விட்டாமின் C யைத் தரக்கூடிய பொருள்கள் உள் நாட்டில் பயிரிடப்பட்ட காய்கறிகளும், உருளைக்கிழங்கும் தான். ஆகையினுல்தான் யுத்தகாலம் பூராவிலும் உணவுப்பொருள் மந்திரி இலாகாவில் காய்கறிகளை வாங்கி பச்சையாகத் தின்னும்படிக்கும் அல்லது அதிலுள்ள சத்துப் பொருள்களை அழிவுபடாமல் சமையல் செய்யும்படிக்கும் ஜனங்களிடம் வற்புறுத்தி வந்தார்கள். குழந்தைகளுக்கு விட்டாமின் (C) குறைபடாமலிருப்பதற்காக பழ ரசங்கள் இறக்குமதி செய்யப்பட்டு ஐந்து வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. இதனுல் பிரிடிஷார்கள் பசிப்பிணிக்குட்பட்டிருந்தார்களா? இல்லை. அவர்கள் கனமான, ஸ்டார்ச் உள்ள பொருள்களையும், மாவு, உருளைக்கிழங்கு, காய்கறிகள் முதலியவற்றையும் கொண்டு பசியைத்தீர்த்து விடுகிருர்கள், யுத்தத்துக்குமுன் அவன் ஒரு வாரத்திற்கு சராசரி 3·75 ராத்தல் மாவு சாப்பிட்டுவந்தான். 1943-ம் வருஷத்தில் 4·43 ராத்தலாக அதிகரித்தது. யுத்தத்துக்குமுன் அவன் வாரத்திற்கு 3·40 ராத்தல் உருளைக்கிழங்கு சாப்பிட்டு வந்தான். 1943-ம் வருஷத்தில் இது 5·25 ராத்தலாக அதிகரித்தது, உருளைக்கிழங்குதான் அவனுக்கு பக்கபலம். அவைகள் பசியை ஆற்றியதுமல்லாமல், காய்கறியைத் தின்பது அவசியமில்லை என்று நினைத்தவர்களுக்கு விட்டாமின் (C) ஐயும் இடைவிடாது கொடுத்து வந்தது.

பிரிடிஷார்கள் யுத்தத்துக்குமுன் 30 ராத்தல் சர்க்கரை சாப்பிட்டதுபோக இப்பொழுது 20 ராத்தல்தான் உட்கொள்ளுகிருர்கள். இனிப்புப் பதார்த்தங்களுக்கும், ஜாமுக்கும், கேக்குகளுக்கும், ரொட்டிக்கும் உள்பட இவ்வளவுதான் சர்க்கரை ஒருவருக்கு செலவாகிறது.

இவ்விதமாக பிரிடிஷ் மக்கள் அவர்களுக்குக் கிடைத்த குறைவான மிதமான உணவுப் பொருள்களைக்கொண்டு திருப்தியடைந்திருக்கிருர்கள். மேலும் உணவுப் பொருள்களைப் பங்கிடு செய்வதிலும் பிரிடன் அதன் புத்திசாலித்தனத்தையும் துணிவையும் வெளிப்படுத்தியிருக்கிறது. மேலும் ஐதீகமான ஆகாரங்களுக்குப்பதிலாக யுத்தகால பதார்த்தங்களையும் தாயாரித்துவிட்டது.

சுருங்கி வரும் உலகம்.

வால்டர் டாஷ்ஃபிக்.

பிரிடனின் சுற்றுப்பிரயாணிகள் செய்து வரும் சமாதான கால திட்டத்தைப் பார்க்குமளவில் யுத்தத்துக்குப் பின் உலகத்தில் மாறுதல் ஏற்படுமென்பது வெளிப்படுகிறது.

லண்டனிலுள்ள சுற்றுப்பிரயாண நிலயம் விமானங்கள் மூலம் ஐரோப்பாவையும் ஆபிரிக்காவையும் சுற்றி வருவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு ரயில்வேயில் 3-வது வகுப்பு பிரயாணிக்கு ஏற்படக்கூடிய செலவுக்கு மேல் உபரிச் செலவு ஒன்றும் ஆகாது. இந்த சுற்றுப்பிரயாணம் ஒன்பது நாட்கள் நீடித்திருக்கும். பிரயாணிகள் 2,600 மைல்கள் சுற்றுவார்கள். பிரான்ஸ், ஸ்பெயின், ஆல்ஜீரியா, ஸார்டீனியா, மாண்டிகார்லோ, ஸ்விட்ஸர்லாந்து முதலிய இடங்களை அவர்கள் பார்வையிடுவார்கள்.

பிரயாணிகள் விமானத்தில் 24-மணி நேரம்தானிருப்பார்கள். மற்ற காலம் பூராவும் அவர்கள் தேசம் தேசமாகவும், நகரம் நகரமாகவும் பாரிஸிலிருந்து கிரானடாவுக்கும் ஆபிரிக்கப் பாலைவனத்துக்கும், ஸார்டீனியாக் காடுகளுக்கும் மாண்டிகார்லோவிலுள்ள பசுமையான பீட பூமிகளுக்கும் இறுதியாக ஸ்விட்ஸர்லாந்திலுள்ள மலை உச்சிகளுக்கும் செல்லுவார்கள்.

இந்தப் பிரயாணத்துக்கு சாப்பாடு, இடவசதி உள்பட 25 பவுன்தான் செலவாகும். இந்தச் செலவை இவ்வளவு குறைத்து வைப்பதற்காக அந்த சம்பெனி ஒரு போக்குவரத்து விமானத்தை உபயோகிப்பதாக உத்தேசித்திருக்கிறது. இதுதான் பிரிஸ்டல் போக்குவரத்து விமானம். இதில் 36 பிரயாணிகள் செல்லலாம். அது மணிக்கு 130-மைல்கள் பிரயாணம் செய்யும். அதில் சௌகரியம், உல்லாசத்திற்குரிய சகல விதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

13-நாட்கள் காலவரை உள்ள மற்றொரு சுற்றுப்பிரயாண கோஷ்டி லண்டனிலிருந்து புறப்பட்டு, ஆம்ஸ்டர்டாம், லீப்ஸிக், வியன்னு, பிராக், பெல்கிரேட், புகாரெஸ்ட், கான்ஸ்டாண்டிநோபிள், ஆதென்ஸ், டிரானு, ரோம், முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பி வரும். இந்தப் பிரயாணம் முந்திய பிரயாணத்தைவிட ஒரு சிறிது அதிகச் செலவுள்ளதாக இருக்கும்.

இந்த சுற்றுப்பிரயாண கோஷ்டிகள் எல்லாம் வியாபாரிகளுக்குள்ள துணிவுடன் சர்வதேச ஆகாயப் போக்குவரத்து சம்பந்தமான பிரச்னைகளில் ஒப்பந்தம் ஏற்படும் என்று நம்பியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையும் இறுதியில் தீர்க்கப்பட்டுவிடும். ஏனெனில் யால்டா மகாநாட்டில் மிஸ்டர் சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மார்ஷல் ஸ்டாலினும் இதைவிட கடினமான பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறார்கள்.

28 தேசங்கள் கூடிப்பேசின சிகாகோ மகாநாட்டில் எல்லா விஷயங்களிலும் ஒன்றுபட்ட அபிப்பிராயம் ஏற்படவில்லையென்பது உலகமறிந்த விஷயம். சிகாகோ மகாநாடு முடிவு செய்யாத பிரச்னைகளை ஆலோசிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. பொதுஜன ஆகாயப் போக்குவரத்துக்குரிய முக்கியமான எல்லா அம்சங்களும் ஏற்பாடாகிவிட்டன. ஆகிலும் ஏற்பட்டுள்ள முடிவில் சில தனிப்பட்ட பிரச்னைகள் மட்டும் பாக்கியிருக்கின்றன.

இதே சமயத்தில் வருங்காலத்திய அபிவிருத்திக்காக ஏற்பாடுகள் அநேகம் நாடுகளில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதில் பிரிடனில் ஸ்வின்டன் பிரபு பொதுஜன ஆகாயப் போக்குவரத்து மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். மாண்ட்ரிலிலும் லண்டனிலும் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதிநிதிகளுடன் இந்த பிரச்னைகளைப்பற்றி அவர் நடத்திய சம்பாஷணைகள் அடுத்துவரும் வசந்த காலத்தில் தொடரப்படும். லண்டனில் சாம்ராஜ்ய ஆகாயப் போக்குவரத்து கௌன்ஸிலின் தலைமை காரியாலயம் அமைக்கப்பட்டுவிட்டது.

இந்த உலக யுத்தத்துக்குப் பின் ஒரு புதிய யுகம் உண்டாகப்போகிறது. அதில் ஆகாய விதியை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் உருவாகும். இது வரையில் மதித்திராத சௌகரியங்களை அளிக்கும் விமானப் போக்குவரத்து திட்டம் மனித வர்க்கத்தின் ராஜீய எண்ணங்களுக்கு புதிய வழியைக் கற்பிக்கும். உலகமளாவிய போக்குவரத்து என்பது ராஜ்யங்களின் எல்லைச்சரக வரம்பையும் மீறியுள்ளது.

யந்திர சம்பந்தமான விஞ்ஞான சாஸ்திரம் நல்ல காரியத்துக்கும் கெட்ட காரியத்துக்கும் பிரயோகப்படுத்தக்கூடியது. இந்தக் கோரமான பாழாக்கும் யுத்தத்துக்குப் பின் மனித வர்க்கம் விஞ்ஞான சாஸ்திரத்தின் நல்ல பாகத்தை உபயோகிக்கும் படிப்பினையை ஏற்றுக்கொள்ளும். ஆகாய ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டதினால் உலகம் சுறுங்கிவிட்டது. ஆகினும் உலகத்தின் அழகான பாகங்களையும் அற்புதங்களையும் இப்பொழுது சாதாரணமான மனிதன் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. பத்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன் அவனுக்கு அவ்விதமான சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய பஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 242. (6-வது பிரிவு).

31- 3-45	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
1- 4-45	கீரனூர்	... ,,	7.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30
2- 4-45	பெருங்களூர்	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30
3- 4-45	குடுமியாமலை	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
4- 4-45	மலையடிப்பட்டி	... மாலை	7.00
,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30
5- 4-45	அரிமளம்	... ,,	7.00
,,	ராயவரம்	... ,,	7.30
6- 4-45	பொ. புதுப்பட்டி	... ,,	7.00
,,	வேந்தம்பட்டி	... ,,	7.30

பிரஸங்கம் 243 (1-வது பிரிவு).

7- 4-45	நார்த்தாமலை	... மாலை	7.00
8- 4-45	,,	... ,,	7.00
9- 4-45	,,	... ,,	7.00
10- 4-45	,,	... ,,	7.00
11- 4-45	மலைக்குடிப்பட்டி	... ,,	7.00
11- 4-45	கோனுபட்டு	... மாலை	7.30
12- 4-45	பனையப்பட்டி	... ,,	7.00
,,	ராங்கியம்	... ,,	7.30
13- 4-45	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

31— 3—45	வெட்டம்விடுதி.
1— 4—45	விராச்சிலை.
3— 4—45	பேராம்பூர்.
4— 4—45	கரம்பக்குடி.
5— 4—45	கீழாநிலை.
7— 4—45	நார்த்தாமலை.
8— 4—45	,,
9— 4—45	,,
10— 4—45	,,
11— 4—45	கீழாநிலை-புதுப்பட்டி.
12— 4—45	குழிபிரை.
13— 4—45	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,700—4-4-45.